DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416-752-1524

உதயம் 1452 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 2, 2024

# கனடா தமிழ்ச் சங்கம், 28 — 01 — 2024 அன்று நடத்திய முப்பெரும் திருவிழாவில் வாழ்நாள் சாதனையாளர்கள் விருது பெற்ற மூவர்

கனடா தமிழ்ச் சங்கம், 28-01-2024 அன்று நடத்திய முப்பெரும் திருவிழா ஈற்றோபிக்கோ நகரில் உள்ள ஸ்ரீங்கரி சன சமூக நிலைய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தலைவர் வள்ளிக்கண்ணன் மருதப்பன் தனது சக அங்கத்தவர்கள் அனைவரோடும் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார்.

விழாவின் பிரதம விருந்தினராக **Consul General Sh. Siddhartha Nath** ரொறன்ரோவிற்கான இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பின்னர் வாழ்நாள் சாதனையாளர்கள் விருது பெற்ற மூவருக்கும் விருதுகளை வழங்கினார்.

மருத்துவர் சுதர்சன் தேவநேசன்
மருத்துவம், சமூக சேவை
பேராசிரியர் கலாநிதி நாகராஜ ஐயர் சுப்பிரமணியன்
கலை இலக்கியம் மற்றும் திறனாய்வு
ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
ஊடகப்பணி ஆகியோருக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)



# Premier of Ontario Dough Ford and his Cabinet Ministers and MPPs made an official Visit to S & B Pallets Ltd, in Scarborough

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட், அமைச்சர்கள், மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக ஸ்காபுறோ S&B Pallets Ltd தொழிற்சாலைக்கு விஜயம்

30-01-2024 செவ்வாய்க்கிழமை கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் கௌரவ டக் போர்ட் அவர்களும் மற்றும் அவரது அமைச்சரவை அமைச்சர்களான ரேமண்ட் சோ மற்றும் விஜய் தணிகாசலம் மற்றும் மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரிஸ் பாபிகியன் மற்றும் டேவிட் ஸ்மித் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக ஒன்றை மேற்கொண்டு ஸ்காபுறோ நகரில் தமிழ் இளைய சகோதரர்கள் திரு விஜய் கோணேஸ்வரன் தலைமையில் நடத்திவரும் **S & B Pallets Ltd** என்னும் வெற்றிகரமான தொழிற்சாலைக்கு விஜயம் செய்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)



Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய 'தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்'








கனடா- ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய 'தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்' கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.00 மணி தொடக்கம் கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானம் மற்றும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் நிறுவனரும் பிரதம சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் வழி நடத்தலில் சக சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் கல்லூரியின் நிர்வாகிகள் மற்றும் அதிபர் ஆசிரியைகள் ஆகியோர் இணைந்து விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

விழாவில் தொடர்ச்சியாக எவ்வித தாமதமும் இன்றி மேடையேறிய முத்தமிழின் அடையாளமாக விளங்கிய கூறுகளான இயல், இசை, நாடகம் ஆகியவை நம் தமிழர் பாண்பாட்டையும் கலை இலக்கியத்தையும் மரபு சார்ந்த விடயங்களையும் இணைத்து நம் மொழியின் மேன்மையினையும் சிறப்பையும் எடுத்தியம்பின என்றால் மிகையாகாகாது.

நிகழ்ச்சிகள் மிகுந்த நேர்த்தியாக ஒழுங்கு படுத்தப்பெற்ற நகர்ந்து சென்ற வேளை அவற்றை சிறப்பாகத் தொகுத்து வழங்கிய ஸ்ரீமதி மது நந்தினி தயானந்த சர்மா அவர்களின் பொறுமையுடனான பங்களிப்பைப் பாராட்ட வேண்டும்.

மேலும், நமது மாணவச் செல்வங்களை தேர்ந்தெடுத்து பயிற்றுவித்து மேடையேற்றிய பின்னரும் அவர்களோடு சமாந்தரமாகப் பயணித்த அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டியாக வேண்டும். அழைக்கப்பெற்ற பல விருந்தினர்கள் தங்கள் சிறப்பான உரைகளை ஆற்றிச் சென்றனர்.

படங்கள்:- சத்தியன்-

# கனடா தமிழ்ச் சங்கம், 28 – 01 – 2024 அன்று நடத்திய முப்பெரும் திருவிழாவில் வாழ்நாள் சாதனையாளர்கள் விருது பெற்ற மூவர்






கனடா தமிழ்ச் சங்கம், 28-01-2024 அன்று நடத்திய முப்பெரும் திருவிழா ஈற்றோபிக்கோ நகரில் உள்ள ஸ்ரீங்கரி சன சமூக நிலைய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தவைரும் வீடு விற்பனை முகவரும் சமூக அக்கறை கொண்டவருமான வள்ளிக்கண்ணன் மருதப்பன் தனது சக அங்கத்தவர்கள் அனைவரோடு இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார்.

விழாவின் பிரதம விருந்தினராக **Consul General Sh. Siddhartha Nath** ரொறன்ரோவிற்கான இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பின்னர் வாழ்நாள் சாதனையாளர்கள் விருது பெற்ற மூவர்கள்.:-

1.மருத்துவர் சுதர்ஷன் தேவநேசன் - மருத்துவம், சமூக சேவை வடஅமெரிக்க தமிழ் வாழ்நாள்
சாதனையாளர் விருது
2.பேராசிரியர் கலாநிதி நாகராஜ ஐயர் சுப்பிரமணியன்
தமிழ் இலக்கியம், தமிழாய்வு
வடஅமெரிக்க தமிழ் வாழ்நாள் சாதனையாளர் விருது
3.ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
ஊடகப்பணி, ஆகியோருக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து முப்பெரும் திருவிழாவில் இவ்வருடத்தின் வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருதுகள் பெற்ற 9 சாதனையாளர்கள்:

விஜய் மணிவேல்
சமூக சேவை
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
பரமநாதன் விக்னேஸ்வரன்
ஊடகப்பணி, நாடகக்கலை
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
பிரகா' வெங்கடராமன்
தொழில், சமூகப்பணி
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
பொன்னையா விவேகானந்தன்
தமிழ் கல்வியாளர்
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா
தமிழ் இலக்கியம், கல்வி, மொழிபெயர்ப்பாளர்
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
அகணி சுரேஸ்
தமிழ் எழுத்தாளர், சமூகப்பணி
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
கிீோர் சுப்ரமணியன்
வணிகம் மற்றும் வழக்கறிஞர்
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
ராகமாலிகா மோகன்ராஜ்
பரதக் கலைஞர்
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
ஜோஷ்வா சுப்புராஜ்
உடற்பயிற்சி பயிற்சியாளர்
வடஅமெரிக்க தமிழ் மேன்மையாளர் விருது
ஆகியோருக்கு பல்வேறு துறை சார்ந்த பிரமுகர்கள் அன்னைய தினம் விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்கதள்.



விழாவை நடத்தியவர் கனடா தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்கள் மேலும் காலை 10.00 மணி தொடக்கம் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த மாயாஜால வித்தைகளின் வித்தகர் சாக் வசந்த் அவர்களது மாயாஜாலக் காட்சிகளும் இடம்பெற்று அவை சபையோரால் நன்கு ரசிக்கப்பெற்று வியந்தும் பாராட்டப்பெற்றன.

# ஸ்ரோவில் நகர பல்கலாச்சார கழகம் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"





கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் ஸ்ரோவில் நகரத்தில் வாழும் தமிழ் மக்கள் இணைந்து நிறுவிய "ஸ்ரோவில் நகர பல்கலாச்சார கழகம்" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்" கடந்த வெள்ளிக்கிழமையன்று 26-01-2024 மாலை அங்குள்ள உயர் கல்லூரி மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. கழகத்தின் தலைவர் சிவன் இளங்கோ மற்றும் செயலாளர் சுந்தரலிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த அற்புதமான விழாவில் முத்தமிழின் மூன்று பிரிவுகளாக விளங்கும் "இயல். இசை. நாடகம்" ஆகியவை நிகழ்ச்சிகள் நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பல நடன ஆசிரியைகள். இசையாசிரியர்கள் மற்றும் பல தமிழாசிரியர்கள் ஆகியோரின் மாணவ மாணவிகள் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை மேடையில் சமர்ப்பித்தனர்.

அவையனைத்தும் தமிழ் மொழியினதும் தமி-ழர் பண்பாட்டினது முக்கியத்துவத்தை எடுத்து விளக்கியிருந்தன.



விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் மேயர்கள் ஆகியோர் தமிழ் மக்கள் கனடிய நீரோட்டத்தில் ஆற்றிவரும் பணிகளையும் அளிக்கும் பங்களிப்பையும் விபரமாகத் தெரிவித்து பாராட்டியும் சென்றனர். மண்டபம் நிறைந்த இந்த விழாவில் பார்வையாளர்களாக கலந்து கொண்ட அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அனைத்து நிகழ்ச்சிகளையும் கண்டு களித்து இில்லம் ஏகினர். -படங்கள் : சத்தியன் மற்றும் ஐயா4யூ

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தாயகத்தில் எஞ்சியிருக்கும் எமது மக்களையாவது வாழவிடுங்கள் ‘சாரதிகளே’!

இலங்கை என்னும் மாங்கனித் தீவை சிதைத்து அதை இனவாதத்தினதும் மதவாதத்தினதும் பிடிக்குள் கொண்டு வந்து சீரழித்துள்ள தேசத்தின் ‘சாரதிகளாக’ விளங்கும் அரசியல் தலைவர்கள் எமது மக்களை கொன்றழித்து வருகின்றார்கள். இன்னும் அந்த கொடுமை எமது தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொடர்கின்றது என்பதை நாம் தினமும் பார்த்தும் செவிமடுத்தும் வருகின்றோம். ஆட்சியைக் கையிலெடுத்து அதோடு சேர்த்து இனவாதத்தையும் மதவாதத்தையும் கைகளில் ‘வெறி’ கொண்டவர்களாக காவிக் கொண்டு திரிகின்றவர்கள் தான் தொடர்ச்சியாக ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்து கொள்ளத் துடிக்கின்றார்கள். அவர்கள் இராணுவக் கொடியவர்களை எம் மக்கள் மத்தியில் ஏவி விட்டு எம் இன மக்களை அழித்தும் அடக்கியும் வருகின்றனர்.

இவ்வாறான கொடிய நாட்களை தினமும் சந்தித்த வண்ணம் தங்கள் இக்கட்டான வாழ்க்கையை நடத்தும் எம் மக்களுக்கு வறுமையும் பசியும் அவர்களை எச்சரிக்கும் ஆயுதங்களாக ஏவப்பட்டுள்ளன. அந்த மக்கள் இன்னும் தங்கள் மண்ணை விட்டு நீங்கிச் செல்லாமல் தொடர்ச்சியாக தாய் மண்ணின் மீது பற்றுக் கொண்டு சொல்லவொண்ணா துயரங்களின் மத்தியில் வாழ்ந்து மடிய ஆயத்தமாக உள்ளார்கள்.

ஆனால் அவர்களின் உயிர்களை குறி வைக்கும் கொடிய அரசியல்வாதிகள் மற்றும் படையினராக காடையர்கள் என ‘கொலையாளிகள் எம் மண்ணில் பிரசன்னமாகி உள்ள வேளையில் எமது மண்ணில் வாகனச்சாராதிகளாக உள்ள ‘இன்னொரு வகையான ‘கொலைஞர்கள்’ எம் மக்களின் உயிர்களைப் பறித்து அவர்களை பிணங்களாக வீதிகளில் வீசி எறிகின்றார்கள். எமது மக்கள் பல்வேறு தேவைகளுக்காக வீதிக்கு வந்து பயணிக்க போது வாகனங்களைச் செலுத்தி வரும் பேய்களாகத் தெரியும் எமது மொழி பேசும் சாரதிகளை நம்பியே வீதிகளில் பயணிக்கின்றார்கள்.

ஆனால் அந்த சாரதிகள் என்ற பெயரில் மக்களை சாகடிப்பவர்களாக மது போதையில் வாகனங்களைச் செலுத்துகின்ற கொடியவர்கள் இதுவரை நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை தங்கள் ‘போதைக்கு’ பலியாக்கியுள்ளார்கள்

சில தினங்களுக்கு முன்னர் குறித்த குடும்பஸ்தர் கிளிநொச்சி - ஆனையிறவு பகுதியில் இருந்து இரணைமடுவுக்கு மாடுகளை கொண்டு சென்றுள்ளார். இதன்போது வீதியால் வந்த அரச பேருந்து சாரதி மது போதையில் குறித்த நபரையும் அவரது 8 மாடுகளையும் மோதிவிட்டு, தவறான பக்கத்துக்கு சென்று, எதிரே வந்த ஹையேஸ் ரக வாகனத்தையும் மோதியது. இதன் காரணமாக 8 மாடுகளும், இளம் குடும்பப்பெண் ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், குறித்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரும் தற்போது மரணத்தை தழுவியுள்ளதாக அறியப்படுகின்றது.

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறி மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு அவர்கள் வாகனங்களை செலுத்தி வரும் வழிகளில் உள்ள உணவகங்களின் உரிமையாளர்களே மதுவையும் சுவையான உணவையும் வழங்கி சாரதிகளை போதை நிறைந்தவர்களாக மாற்றிவிடுகின்றார்கள் என்ற தகவலும் எமக்கு கிடைக்கின்றன. எவ்வாறாயினும் இவ்வாறாக நமது மண்ணில் தினமும் வாகனங்கள் மோதிக்கொள்வதும் இதனால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. இந்தி விடயத்தை ‘இயலாத’ அரசாங்கத்தில் அமர்ந்துள்ள அமைச்சர்களை நாடியும் பயனற்றுப் போன நிலையில் எமது தமிழ் பேசும் அரச அதிகாரிகளாவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் மூலம் விடுக்கின்றோம்.!



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

DTA Tours & Travel

12 DAY FLORIDA ROAD TRIP
FEB 14 - FEB 25, 2024
ORLANDO | MIAMI | KEY WEST









$1500 including bus tour & accomodation
[$500 deposit with registration]

Register online: durhamtamils.org
E-transfer: dtatravell@gmail.com

647-606-1222

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

Room for Rent

-Scarborough Town Ctr
தனி அறை, 2 bedroom 2 bath condoல் வாடகைக்கு உள்ளது. Share with Tamil senior male. TTC at door step. Gym, Swim pools, Tennis, BBQ area, and more. Available January 1st. Prefer Tamil male. Contact. 647 273 2053.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இலங்கை வரை படத்தில் இருந்து மன்னார் தீவை முற்றாக அழிப்பதை நோக்கி நகர்கின்றது

## - மன்னார் மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

(மன்னார் நிருபர் எஸ். றொசேரியன் லெம்பேட்)
(26-01-2024)

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைளுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னார் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் வெள்ளிக்கிழமை (26) காலை 10 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மார்க்கஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு பேரணியின் போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி பிரதான வீதியூடாக சென்று மன்னார் பஜார் பகுதியை சென் றடைந்தது. பின்னர் மன்னார் மாவட்டச் செயலகம் முன் ஒன்று கூடிய மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தமது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதன் போது மன்னார் தீவில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் விடயங்களை மக்கள் முன் வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீள மக்களிடம் கையளிப்பதோடு பொதுவான காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அத்தோடு அவர்களின் அமைதியான வாழ்விற்கு வழி வகுத்தல், பல அரச காணிகள் தவறான செயற்பாடுகளினால் மக்களின் வளர்ச்சியினை பாதிக்க கூடியதாக ஒரு சிலர் தமதாக்கி உள்ளனர். என குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் வேறு மாவட்ட அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் முகவர்கள் மன்னாரில் உள்ள மக்களினதும், பொதுக் காணிகளையும் வாங்கி தமதாக்கிக் கொள்கின்றனர்.

இதனால் வருங் காலத்தில் மக்களுக்கும், அவர்களுடைய சந்ததியினருக்கும் ஏற்படவிருக்கும் அபாயம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பாக தலைமன்னார் துறை காணி, நாயாற்றுவெளி காணி, பேசாலை பகுதிகளில் குறித்த பிரச்சினை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய காணிகள் அபகரிக்கப்பட்டு சொந்த தேவைக்காக பயன் படுத்தப்படுவதால் இதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், மன்னார் தீவில் அரச மற்றும் தனிப்பட்ட முகவர்களால் 4,500க்கு மேல் துளைகள் 50 அடிக்கு கீழ் இடப்பட்டு கனிய மணல் அகழ்வு இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளது.









இதில் எடுக்கப்பட்ட மண்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் மன்னார் தீவில் அனைத்து பிரதேசங்களிலும் கனிய மணல் அகழ்வு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கனிய மண் அகழ்வினால் நிலமேற்பரப்பு மிகவும் இறுகமற்று போகிறது.

தொடர் நடவடிக்கைக்காக இக் கனிய மண் ஆய்வு செய்ய அவுஸ்திரேலியாவிலுள்ள தனிப்பட்ட கம்பனிகளுக்கு இம்மண்ணை விற்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டது.

தற்போது மன்னார் தீவின் 63 சதவீத நிலப்பரப்புகள் கடல் மட்டத்தின் கீழ் உள்ளது. இக்கனிய மண் அகழ்வு தொடருமானால் காலநிலை காரணமாக மன்னார் தீவு முற்று முழுதாக நீரில் மூழ்கும் அபாய நிலை காணப்படுவதால் இக் கனிய மணல் அகழ்வு உடன் தடைசெய்யப்பட வேண்டும்.

இந் நடவடிக்கையினால் மன்னார் தீவில் உள்ள இயற்கை குடி நீர் முற்றாக பாதிக்கப்படுவதுடன் மன்னார் தீவினுள் காணப்படும் பனை, தென்னை போன்ற பயன் தரும் மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படும்.

இதனால் மக்கள் தீவினுள் வாழ முடியாத நிலை ஏற்படும். எனவே இச் செயற்பாட்டை உடன் நிறுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மேலும் மன்னார் தீவினுள் இதுவரை 36 இற்கு மேற்பட்ட உயர் மின் வலு காற்றாடிகள் அமைக்கப்பட்டு தொடர்ந்தும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் 100 இற்கும் மேற்பட்ட உயர்மின் வலுக் காற்றாடிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் தீவை உயர் மின் வலுக்காற்றாடிகளின் பண்ணையாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு மின்வலு காற்றாடிக்கு 6..5 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிக்கவும் விசேட சட்ட மூலம் இந்த நிலங்களை அரசுடமையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்நிலங்கள் சுவீகரிக்க படுவதனால் மன்னார் தீவினுள் வசிக்கும் மக்களின் இருப்பு நிலம் கேள்விக்குறியாகிவிடும். அத்தோடு மக்கள் பலவந்தமாக இடம்பெயர்வு செய்யப்படும் நிலை உருவாகலாம்.

30 வருடங்களுக்கு மேலாக இம்மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு யாவற்றையும் இழந்து சீவிப்பதற்கு கஷ்டப்படும் நிலையில் செயற்திட்டங்கள் நடைபெறுமானால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிப்பு நிலை ஏற்பட்டு இம்மக்கள் மன்னார் தீவை விட்டு வெளியேறும் ஒரு துர்பாக்கிய நிலை ஏற்படும்.

எனவே அதை நிறுத்தி மன்னார் மக்களின் இருப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

மேலும் தற்போதைய நாட்டின் நிலமையில் போதைப்பொருள் பாவனை மிகவும் உயர்வான மட்டத்தில் காணப்படுகின்றது. இதில் முக்கியமாக இளையோர் மட்டத்தில் போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் இப்போதைப்பொருட்கள் நாளாந்தம் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் இறுக்கமாக காணப்பட்டாலும் போதைப்பொருள் கடத்தல் சர்வ சாதாரணமாக காணப்படுகிறது.

இதனால் தற்போது பாடசாலை மட்டத்தில் இருந்து இப்ப போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. எமது மாவட்டத்தை சுற்றி இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைக்காக கடற்படை, தரைப்படை, பொலிஸ் காணப்பட்டாலும் போதைப்பொருள் விற்பனை சாதாரணமாக காணப்படுகிறது.

எனவே இப் போதைப்பொருள் பாவனையை முற்றாக இல்லாமல் செய்யுமாறும் கேட்டுக்கொள்வதோடு இதனால் கல்வி மற்றும் கலாச்சார சீரழிவுகளும் ஏற்படுகின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

தற்போது மன்னாரில் அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இலங்கையின் வரைபடத்தில் இருந்து மன்னார் தீவை முற்றாக அழிப்பதை நோக்கி நகர்கின்றது.

எனவே மன்னார் மக்களை பாதிக்கும் பிரச்சனைகளை தயவு கூர்ந்து கவனித்து எங்களின் நிலம், உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். என்ற கோரிக்கையை முன் வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் மாவட்டச் செயலகத்திற்கு சென்று கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் திருகோணமலையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

## பொதுச் செயலாளராக குகதாசனும் சிரேஸ்ட துணைத் தலைவராக சி.வி.கே. சிவஞானமும், துணைப் பொதுச் செயலாளராக எஸ்.எக்ஸ். குலநாயகயகம் தேர்வு செய்யப்பட்டார்

- ந. லோகதயாளன்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தேர்வு சனிக்கிழமையன்று 27ம் திகதி திருகோணமலையில் இடம்பெற்றது.

இவ்வாறு இடம்பெற்ற புதிய நிர்வாகத் தேர்வில் தலைவராக சி. சிறிதரனும் பொதுச் செயலாளராக குகதாசனும் சிரேஸ்ட உப தலைவராக சி.வி.கே. சிவஞானமும், துணைப் பொதுச் செயலாளராக எஸ்.எக்ஸ். குலநாயகயகம் தேர்வு செய்யப்பட்டார்.

**உப தலைவர்களாக**

சாள்ஸ் நிர்மலநாதன்
த. கலையரசன்
பா. அரியநேந்திரன்
ப. சத்தியலிங்கம்
கே.வி. தவராசாவும்

**உப செயலாளர்களாக**

சாந்தி சிறீஸ
ரஞ்சினி கனகராசா
த. குருகுலராயா
ஈ. சரவணபவன்
இரா. சாணக்கியன்
சி. சிவமோகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்

**செயற்குழு உறுப்பினர்களாக**

எம்.ஏ. சுமந்திரன்
கருணாநிதி
அ. பரஞ்சோதி
கே. சயந்தன்
து. ரவிகரன்
சு. துரம்
சி. இரட்ணவடிவேல்
சீ. யோகேஸ்வரன்
க. கோடீஸ்வரன்
க. கனகசிங்கம்
க. ஜெக்குமார், ஆகியோருடன் பொருளாளர்களாக
பெ. கனகசபாபதி மற்றும் சிறிநேசன் உள்ளிட்ட 27 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மகாத்மா காந்தியின் 76 வது சிரார்த்த தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது



யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்தி சேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் நிகழ்வுகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றலில் இடம்பெற்றது.



குறித்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர், காந்தி சேவா நிலைய உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்ட நிகழ்வில், காந்தியம் காலாண்டு பத்திரிகையும் வெளியீட்டு வைக்கப்பட்டது பத்திரிக்கையை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக அதிகாரி வெளியிட்டு வைக்க யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பெற்றுக் கொண்டார்.

# திருநெல்வேலி சந்தையில் மக்கள் நடமாடும் பகுதிகளில் கைக்குழந்தையுடன் ஏமாற்றி திருடி வந்த சகோதரர்கள் கைது!



திருநெல்வேலி சந்தையில் இரண்டு நாட்களுக்கு முன், ஜேர்மனில் இருந்து வந்த பெண்மணியின் கைப்பயில் இருந்த 500யூரோ பணம் இலங்கை பணம் 20000 உட்பட 1 லட்சத்து இருபதாயிரம் ரூபா பணம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை என்பன களவு போனது. இது குறித்து அந்த பெண்ணால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு தகவலுக்கமைய, கோப்பாய் பொலிசாரும் இணைந்து சங்கானையைச் சேர்ந்த 22 வயது ஆண், 28 வயது பெண் ஆகிய சகோதரர்களை கைது செய்து பொருட்களையும் மீட்டுள்ளனர்.

விசாரணைகளில், சகோதரி கைக்குழந்தயை மக்கள் உள்ள இடங்களில் கொண்டு சென்று ஏமாற்றி களவு எடுப்பதாக கூறப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு — கைதான சந்தேக நபரிடம் விசாரணை முன்னெடுப்பு






(29-01-2024)

சுமார் 8 இலட்சம் பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிளை திருடி சென்ற சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 8 லட்சத்திற்கும் மேல் பெறுமதி வாய்ந்த ''Bajaj pulsar Ns 200'' என்ற வகையான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜனவரி மாதம் 14ம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் பலன் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து மோட்டார் பைக்கிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) மீட்டதுடன் திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மக்களை அடக்கி ஒடுக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடகங்களை அடக்கும் நிகழ்நிலை காப்புச்சட்டம் ஆகியவை மீளப்பெற வேண்டும். நா.உ.கோ. கருணாகரன்

(கனகராசா சரவணன்)

இலங்கை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படுகின்ற சட்டங்கள் மக்களை அடக்கி ஒடுக்கும் சட்டங்கள் தான் கொண்டுவரப்படுகின்றது 79 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் இன்று ஒட்டுமொத்த இலங்கை மக்களுமே இந்த சட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டு இச்சட்டத்தின் வழியை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள் எனவே இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடகங்களை அடக்கும் நிகழ்நிலை காப்புச்சட்டம் மீளப்பெற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சனிக்கிழமை (27) கறுப்பு ஜனவரியை முன்னிட்டு ஊடகவியலாளர்கள் ஊடக அடக்குமுறைக்கு எதிராக நீதி வேண்டி இடம்பெற்ற ஆர்பாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1979 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக 6 மாதத்திற்கு தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத சட்டம் இன்று வரை தொடர்ச்சியாக இருக்கின்றது இந்த நிலையில் ஊடகங்களையும் மக்களின் கருத்து சுதந்திரத்தையும் அடக்குவதற்காக இந்த நிகழ்நிலை காப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்த சட்டத்திற்கு வடகிழக்கு சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கை உயர்த்தி ஆதரவு கொடுத்திருக்கின்றார்கள் தமிழ் மக்களுக்காக தான் இச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றதோ என்ற சந்தேகங்கள் எழுகின்றது ஏனென்றால் கூடுதலான ஆர்ப்பாட்டங்கள் நில அபகரிப்புகள் காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கான ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் வட கிழக்கிலே கூடுதலாக நடக்கின்றது.

2009 யுத்தம் மௌனிக்கப்பட்டதற்கு பின் ஒரு மௌன யுத்தம் வடகிழக்கை பௌத்த மதமாக்குவது காணி அபகரிப்பதற்கு பெரும்பான்மையான மக்களை குடியேற்றி எமது இன பரம்பலை குறைப்பதுமான ஒரு நிகழ்ச்சி நிரல் மூலமாக அரசும் அரச அதிகாரிகளும் புத்த பிக்குகள் கூட இந்த நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றது.

இப்படியான காலகட்டங்களில் வடகிழக்கிலே மக்கள் கிளர்ந்து எழக்கூடாது என்பதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது அதற்கு மேலாக இந்நாட்டின் அரகலய போராட்டம் என்ற போராட்டங்கள் கூட இனி ஏற்படக் கூடாது எனவும் அரசுக்கு எதிராக மக்கள் கருத்து கூறக்கூடாது என்று அரசு நினைக்கின்றது ஒன்றை மட்டும் இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் இன்று இருக்கும் அரசு நாளை மாறலாம் நாளை மாறும் போது தனக்கு சாதகமாக தற்போது இருக்கும் அரசு அங்கத்துவம் பெறுபவர்கள் கூட இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படலாம்.

இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் கை உயர்த்திய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்கள் கூட இன்னொரு ஆட்சி மாற்றம் ஏற்படும் போது இச்சட்டத்தினால் பாதிக்கப்படலாம் என்பதை உணராமல் அவர்கள் இந்த சட்டத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கின்றார்கள்.

கடந்த காலங்களிலே ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும் கொல்லப்பட்டும் ஊடக கலையகங்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு வரலாறுகள் இருக்கின்றதுடன் 30க்கும் 40க்கும் மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் யாருக்குமே இன்று வரை நீதி கிடைக்கவில்லை நீதி கிடைக்கும் என்று கூட எதிர்பார்க்க முடியாது.

2009 தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவினர்கள் கூட இன்னும் எங்கு இருக்கின்றார்கள் என்று தெரியாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கான நீதியை கேட்டுக் கொண்டி ருக்கின்றார்கள் இந்த நீதியைக் கூட கொடுக்காத அரசு இப்படியானவர்களுக்கு நீதி கொடுக்குமா என்பது சந்தேகம்தான்.

இருந்தாலும் இன்னும் ஒரு கருத்தும் இருக்கின்றது ஊடகங்களை ஒழுங்கு படுத்தக்கூடிய ஒரு தேவையும் இருக்கின்றது தற்போது ஊடகங்களுக்கு அப்பால் சமூக சமூக வலைத்தளங்களுக்கு ஊடாக சில பாதிப்புகளும் மக்களுக்கு நடக்கின்றது குறிப்பாக சிலர் தற்கொலை செய்வதற்கும் இந்த முகநூல் மூலமாக போலி முகநூல் மூலமாக சில பிரச்சாரங்கள் செய்யப்படுவதனால் அதனை கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இருந்தபோதும் அதை விடுத்து ஊடகங்களை அடக்கி தனக்கு எதிரான கருத்துக்களை யாருமே கூறக்கூடாது என்ற ஒரு நிலையில் தான் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் வருகின்றது என்பதை நாங்கள் எல்லோரும் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கின்றோம் இதனை அரசாங்கம் மீளப்பெற வேண்டும்.

இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு எதிராக 56 அமைப்புகள் குரல் கொடுத்திருக்கின்றார்கள் எனவே சர்வதேசத்தின் கவனம் இலங்கை அரசு மீது திரும்பி இருக்கின்றது ஏற்கனவே பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று சர்வதேசம் கூறுகின்றது பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு சிந்திக்கின்றது எங்களை பொறுத்தமட்டிலே பயங்கரவாத தடுப்புச் சட்டமும் வேண்டாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம் ஊடகங்களை அடக்கும் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் வேண்டாம் என்பதை எங்களுடைய உறுதியான நிலைப்பாடு என்றார்.



# மாணவர்களிடையே அதிகரிக்கும் போதைப்பழக்கம் தடுப்பதில் பெற்றோருக்கே பெரும்பொறுப்பு

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

பாடசாலைகளில் படையினர் போதைப்பொருள் சோதனைகளை மேற்கொள்ளும் அளவுக்கு மாணவர்களிடையே என்றுமில்லாதவாறு போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்திருக்கிறது. போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புகின்ற இராணுவப்பாணி நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகுவதைத் தடுக்கமுடியாது. மாணவர்களிடையே போதைப்பழக்கம் ஏற்படுவதைத் தடுப்பதில் படைத்தரப்பு, ஆசிரியர்கள் எல்லோரையும் விடப் பெற்றோருக்கே பெரும் பொறுப்பு உண்டு என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (27.01.2024) நாவற்குழியில் இடம் பெற்றது. மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கை அரசாங்கம் இப்போது மேற்கொண்டுள்ள போதைப்பொருளுக்கு எதிரான யுக்திய நடவடிக்கையால் போதைப்பாவனையை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துவிடமுடியாது. பெரும் வலைப் பின்னலாக இயங்கிக்கொண்டிருக்கும் போதை வியாபாரத்தில் சிக்கிவருவது கடத்தல்காரர்களும் சில்லறை வியாபாரிகளும் போதைப்பொருள் பாவனையாளர்களும் மாத்திரம்தாம். இதில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகள் அரசஉயர்மட்டங்களின் ஆசீர்வாதத்தோடு பாதுகாப்பாகத்தான் உள்ளார்கள் உறங்கு நிலையில் இருக்கும் இவர்கள் விரைவிலேயே மீள எழுவார்கள்.

கஞ்சாவும் கெரோயினும் மாத்திரம்தான் போதைப்பொருள் அல்ல. கைவிடமுடியாத எல்லாப் பழக்கங்களுமே போதைதான். கைவிடமுடியாத அளவுக்கு புகைப்பிடிப்பதும், மது அருந்துவதும் நேரகாலம் பாராது தொலைக்காட்சித்தொடர்களில் மூழ்கிக்கிடைப்பதும், இரவில் படுக்கைக்குச் செல்லும் போதும் கைப்பேசிகளுடனேயே செல்வதும் போதைதான். பிள்ளைகள் தங்கள் ஆதர்சவழிகாட்டிகளாக முதலில் பெற்றோர்களையே ஏற்றுக்கொள்கிறார்கள். போதைப்பழக்கங்களுக்கு ஆளாகியுள்ள பெற்றோர்களால் ஒருபோதும் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்ட இயலாது. பிள்ளைகள் தவறிழைக்கும்போது தட்டிக்கேட்கவும் முடியாது.

பெற்றோர்கள் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிள்ளைகளை அனுப்பிவைப்பதுடன் தங்கள் கடமைகள் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள். முழுநாட்டையுமே போதைப்பொருட் பாவனை ஒரு புற்றுநோயாகப் பீடித்துவரும் நிலையில் எமது பிள்ளைகள் பெற்றோர்களால் கண்டிப்பாகக் கண்காணிக்கப்படவேண்டும். அவர்களுடைய நண்பர்கள் தொடர்பாகப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். போதைப்பொருட் பாவனை ஒருவழிப்பாதை போன்றது. இதில் ஒருதடவை பிரவேசித்தால் மாணவர்களால் திரும்பிவர முடியாது என்பதைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார் சாந்தனின் தாயார்

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய சாந்தன் நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் பதிலை பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

குறித்த வழக்கின் தீர்ப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சாந்தன் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் தாய் மற்றும் சகோதர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 30.01.2024 அன்று சந்தித்து, சாந்தன் நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இதன்போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானநந்தாவினால் குறித்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி புலிச் சின்னம் அணிந்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் நானாட்டானில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து — இளம் தாய் காயம்

- மன்னார் நிருபர் (31-01-2024)



நானாட்டான் பேருந்து நிலையத்தின் முன்பாக உள்ள பிரதான வீதியில் புதன்கிழமை (31-01-2024 ) நண்பகல் 12 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகின.

குறித்த விபத்தில் இளம் தாய் ஒருவர் காயமடைந்து நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் காயமடைந்த இளம் தாய் நானாட்டான் அச்சங்குளம் கிராமத்தை பிறப்பிடமாகவும் அரிப்பு துறையில் வசிப்பவர் என்று தெரிய வருகிறது.

அரிப்புத்துறை பகுதியிலிருந்து வங்காலை நோக்கி ஆண் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் நாட்டான் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து அரிப்பு துறை நோக்கி குழந்தை ஒன்றுடன் குறித்த இளம் தாய் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்தில் தாய் காயங்களுக்கு உள்ளாகிய போதும் குழந்தை காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த தாய் மற்றும் மகள் இருவரும் அருகில் உள்ள நானாட்டான் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஒரு கையால் ராஜபக்சர்களை அணைத்தபடி மறுகையால் எம்மை அழைக்காதீர்கள். நாம் இப்போது இருக்குமிடமே எமக்கு சௌக்கியம்.

## புதிய கூட்டணிகள் பற்றி மனோ கணேசன்




ராஜபக்சர்களின் அட்டூழியங்களை மன்னிக்க நாம் தயார் இல்லை. ஆகவே ஒரு கையால் ராஜபக்சர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம். நாம் இன்று இருக்கும் இடத்தில் சௌக்கியமாக இருக்கிறோம். கோதாபய ராஜபக்ச போனாலும், அவரது பாவத்தின் நிழல் போகவில்லை. சட்டப்படி கோதாபய ராஜபக்ச 16ம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இந்த அரசு நடக்கிறது. அந்த பாவத்தில் எமக்கு பங்கு வேண்டாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாட்டில் உருவாகிவரும் புதிய கூட்டணிகளிடமிருந்து தமது அணியை நோக்கி வரும் அழைப்புகள் பற்றி, தென்கொழும்பு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

அறிவிக்கப்பட்ட புதிய கூட்டணி நண்பர்கள் என்னுடன் பேசிய போது தெளிவாக ஒன்றை சொன்னேன். ஒரு கையால் ராஜபக்சர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம் என்று சொன்னேன். நாம் இன்று இருக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற இடத்தில் நாம் சௌக்கியமாகவே இருக்கிறோம் எனவும் சொன்னேன்.

தமிழ் முற்போக்கு கூட்டணி நினைத்து இருந்தால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகிய அடுத்த நாளே அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால், அதை நாம் செய்யவில்லை. ஏனென்றால் பேரினவாதம், ஊழல் ஆகிய இரண்டு பேரழிவுகளுக்கும் ஏகபோக உரிமையாளர்களான ராஜபக்சர்களுடன் கலப்பு கல்யாணம் செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் இல்லை. எங்கள் இந்த கொள்கை நிலைப்பாடு காரணமாகத்தான் நாம் இன்று ராஜபக்ச ஆதரவு ரணில் அரசாங்கத்தில் இடம்பெறவில்லை.

இன்று இந்த ராஜபக்ச ஆதரவு ரணில் அரசில் அங்கம் வகிப்பவர்கள், தாம் ஏதோ வெட்டி முறித்து விட்டதாக தப்பு கணக்கு போட்டு விடக்கூடாது. நாம் அங்கே கொள்கை நிலைப்பாடு காரணமாக இல்லை. ஆகவேதான் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். அதுதான் உண்மை. சட்டப்படி கோதாபய ராஜபக்ச 16ம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இன்றுவரை இந்த அரசு தொடர்கிறது. அந்த பாவத்தின் நிழலில் அங்கமான உங்களுக்கு பாவத்தின் சம்பளம் அடுத்த தேர்தலில் கிடைக்கும்.

16ம் திகதி நவம்பர் 2019 முதல் இன்றுவரை, நான்கு வருடங்கள், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. கடந்த நான்கு வருடங்களாக இந்த அரசாங்கத்தின் பதவிகளில் இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளிடம், நீங்கள் இதுவரை வெட்டி முறித்த சாதனைகளை முடியுமானால் பட்டியல் இடுங்கள் என பகிரங்க சவால் விடுகிறேன். அபிவிருத்தி செய்ய நிதி இல்லை என்பீர்கள். சரி, அபிவிருத்தியை விடுங்கள். அரச நிர்வாகரீதியாக தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் அமைச்சர்களாக, துணை அமைச்சர்களாக, அரசாங்க எம்பிகளாக இதுவரை என்ன செய்து கிழித்துள்ளீர்கள் என பகிரங்கமாக சொல்லுங்கள்? வேண்டுமானால், நாம் ஆட்சியில் இருந்த நான்கு ஆண்டுகளில் நாம் செய்த சாதனைகளையும், இன்று நீங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் செய்ய தவறிய சீர்கேடுகளையும் நான் பகிரங்கமாக பட்டியல் இடுகிறேன்.

எனவேதான், இந்த புதிய, பழைய பாவங்களின் கூட்டணியில் நாம் இல்லை. நாங்கள் சோரமும் போகவில்லை. பாவமும் செய்யவில்லை. ஆகவே இந்த பாவத்தின் சம்பளம் எமக்கு கிடையாது. எனவே தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற முற்போக்கு அரசியல் இயக்கம், அடுத்து வரும் புதிய அரசாங்கத்தில், புதிய பலத்துடன், நேர்மையாக அங்கம் வகிக்கும்.



# இளைஞனின் காலை அடித்து முறித்த அச்சுவேலி பொலிஸார்

வீதியால் சென்ற இளைஞன் ஒருவரை சந்தேகத்தின் பேரில் வழி மறைத்த அச்சுவேலி பொலிசார் இளைஞனை தாக்கி மதிலுடன் எறிந்த நிலையில் இளைஞனின் கால் முறிந்த நிலையில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் வைத்தியசாலையில் தனது முறைப்பாட்டை பொலிசாருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில், தான் சைக்கிளில் புத்தூர் பகுதியால் சென்று கொண்டிருந்தபோது சிவில் உடையில் வந்த அச்சுவேலி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் என்னை நில்லடா என கூறினார்.

எனக்கு அன்று காய்ச்சல் மெதுவாகவே சைக்கிள் பயணித்தேன் அவர் கூப்பிட்டது எனக்கு தெளிவாக விளங்கவில்லை.

மோட்டார் சைக்கிளை எனக்கு முன்னால் நிறுத்தி இறங்கடா எனக் கூறினார் ஏன் என கேட்டேன் என்னை முகத்தைப் பொத்தி அடித்தார்கள்.

ஏன் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வரவில்லை என கேட்டார்கள். காய்ச்சல் காரணமாக வரவில்லை என்றேன் மீண்டும் என்னை தாக்கினார்கள்.

நான் கீழே விழுந்த நிலையில் மீண்டும் என்னை தாறுமாறாக தாக்கி இரு பொலிசார் சேர்ந்து அருகில் இருந்த மதிலுடன் என்னை வீசி விட்டுச் சென்றார்கள்.

வீதியால் சென்றவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்தேன் எனது ஒரு கால் முறிந்துள்ளது என்னை தாக்கிய போலீசார் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனது முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

# அதிக ஹெரோயின் பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞரம் ஒருவர் உயிரிழப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

அதிக ஹெரோயின் பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞரொருவர் கடந்த புதனன்று உயிரிழந்துள்ளார். இதன்போது இருபாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த கணேசன் நிஷாந் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் முதல்நாள் உணவருந்தி விட்டு தூக்கத்திற்கு சென்றுள்ளார். இந்நிலையில் வீட்டில் உள்ளவர்கள் புதன் அதிகாலை 4 மணியளவில் அவரை அவதானித்தவேளை அவர் அசைவற்று காணப்பட்டார்.

இந்நிலையில் காலை 5 மணியளவில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின்போது, அவர் அதிக ஹெரோயின் பாவனை காரணமாக உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

# வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின், சிநேகபூர்வ மக்கள் சந்திப்பு ஆரம்பம்



மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை கிராமங்களுக்கே சென்று ஆராயும் நடவடிக்கையை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் ஆரம்பித்துள்ளார்.

பல கிராமங்களின் மக்களை சனசமூக நிலையங்களூடாக ஒன்றிணைத்து, அவர்களுடன் கௌரவ ஆளுநர் சந்திப்புக்களை நடத்த வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய முதலாவது சிநேகபூர்வ மக்கள் சந்திப்பு யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதியில் புதன்கிழமையன்று (31.01.2024 ) நடைபெற்றது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களை கௌரவ ஆளுநர் சிநேகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.



மேற்குறித்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கௌரவ ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. அந்தவகையில், காணி உறுதி இன்மை, வீட்டுத்திட்டம் கிடைக்காமை, கிணறுகள், சிறு குளங்கள் புனரமைக்கப்படாமை, வீதி சீரின்மை, மைதானம் இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கிராம மக்கள் கௌரவ ஆளுநருடன் கலந்துரையாடினார்கள்.

இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கருத்து தெரிவிக்கப்பட்டது.

தொழில் இன்மை, பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கான வசதிகள் இன்மை, போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், பாடசாலை இடைவிலகல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் கேட்டறிந்த கௌரவ ஆளுநர், அபிவிருத்தி திட்டங்கள் கிராம மட்டத்தில் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமை தொடர்பில் கவலை தெரிவித்தார். கிராமங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், அந்தந்த கிராம மக்கள் விரும்பி, உரிமை கோரும் செயற்திட்டங்களாக அமைய வேண்டும் என கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன், அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி, மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய கிராமங்களின் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஆளுநர், அந்த விடயங்கள் தொடர்பில் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை சமர்பிக்குமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

# யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு – அமைச்சின் செயலாளர் மகேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் அமைச்சின் செயலாளர் மகேசன் யாழ்ப்பணத்தில் தெரிவித்தார். இவர் முன்னர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுவான உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பது தொடர்பில் அமைச்சர் கரிசனையாகவே உள்ளது என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்பாணத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய நிதிமன்றத்தில் சாதனை புரிந்த வடக்கு மாகாண வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்ட உதவி பணிப்பாளர் வினோதினி, நான் அரசாங்க அதிபராக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த போது இளைஞர் சேவை மன்றத்தின் செயற்பாடுகளை விரிவாக்குவதில் ஊக்கமாக செயல்பட்டவர் தற்போதும் அவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைத்து தருமாறு நான் அமைச்சின் செயலாளராக பதவியேற்ற போது என்னை தொடர்பு கொண்டிருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் எமது அமைச்சு கரிசனையாகவே உள்ளது அதற்கான இடத்தையும் திட்டச் செலவுகளையும் மதிப்படுமாறு மாவட்ட உதவி பணிப்பாளரிடம் கூறியுள்ளேன்.

தற்போது அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற நிலையில் அமைத்தினால் பாரிய நிதிய ஒதுக்கீடுகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்கிறது.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் வெளிநாட்டு நிறுவனங்கள் புலம்பெயர் கொடையாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற முடியும்.

வடக்கிலிருந்து தேசியப் போட்டிகளுக்காக தெற்கு நோக்கி வருகை தரும் வீரர்கள் பல்வேறு சிரமங்கள் மத்தியில் போட்டிகளில் கலந்து கொள்வதை தொடர்ச்சியாக அவதானிக்க முடிகிறது.

விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதிலிருந்து போக்குவரத்து வரை அவர்களுக்கு பெரியதொரு நிதி செலவு ஏற்படுகிறது.

இவ்வாறு பல சிரமங்கள் இருந்தாலும் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் அவர்களை தேசிய நீதியில் சாதிக் வைத்துள்ளது.

நாட்டின் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அமைச்சின் புதிய செயல் திட்டமாக கிராமத்தில் இருந்து மாவட்டத்திற்கு மாவட்டத்திலிருந்து மாகாணத்துக்கு மாகாணத்தில் இருந்து தேசியம் சர்வதேசம்வரை வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய திட்டத்தினை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்து தயார் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.




ஆகவே யாழ்ப்பாண மாவட்ட வீரர்களுக்கு உள்ளக விளையாட்டுகளில் தேசிய நீதியில் சாதிப்பதற்கு மைதானம் இல்லை என்பது குறையாக இருந்தாலும் அதனை நிவர்த்தி செய்வதற்கு எங்களால் ஆன பங்களிப்பை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெட்டகம் ஆவண சேகரிப்பு மையம் குப்பிளானின் திறந்துவைப்பு!

யாழ்ப்பணம் - குப்பிளானில் நேற்றையதினம் ஆவண சேகரிப்பு நிலையம் ஒன்று சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளியல் ஆய்வாளர் செல்வின் இரானியேல் தலைமையில் காலை 10:30 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் முதல் நிகழ்வாக பெட்டகம் ஆவண சேகரிப்பு மையத்தை சம்பிரதாய பூர்வமாக வணக்கத்திற்க்குரிய வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்ப்பாண பல்கலைக் கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய இயக்குநர் சி.அ.யோதிலிங்கம், பொருளியல் ஆய்வாளர் செல்வில் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

அதனை தொடர்ந்து மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து பெயர்பலகையினை கலைத்துறை பீடாதிபதி எஸ்.ரகுராம், வணக்கத்திற்குரிய வேலன் சுவாமிகள் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்துவைத்தனர். தொடர்ந்து பெட்டகம் ஆணவ சேகரிப்பு நிலையத்தில் மரங்கள் நாட்டப்பட்டன.

மரங்களை கலைத்துறை பீடாதிபதி எஸ். ரகுராம், வணக்கத்திற்க்குரிய வேலன் சுவாமிகள், குப்பிளான் பிரதேசத்தை சேர்ந்த பெண்மணி ஒருவரும் நாட்டிவைத்தனர்.

தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றதுடன் ஆசி உரையினை சிவகுரு ஆதீன முதல்வர் வணக்கத்திற்க்குரிய வேலன் சுவாமிகள் நிகழ்த்தினார்.

தலமை உரையினை நிகழ்வின் தலைவரும் பொருளியல் ஆய்வாளருமான செல்வின் நிகழ்த்தினரார். கருத்துரைகளை சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இயக்குநரும், சட்டத்தரணியும், யாழ்ப்பாண பல்கலைக்கழக வருகை விரிவுரையாளருமான அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம், நிகழ்வின் பிரதம விருந்தினரும் யாழ் பல்கலைக் கழக கலைத்துறை பீடாதிபதியுமான பேராசிரியர் ஏஸ். ரகுராம், யாழ்ப்பாண பல்கலைக் கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் சமூக ஆய்வாளர் நிலாந்தன், சிரேஸ்ர விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா, சைவ சித்தாந்த துறை சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், கலாநிதி சிதம்பரநாதன், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் சோ.பரந்தாமன் ஆகியோர் நிகழத்தினர்.

இந்நிகழ்வில் சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய செயற்பாட்டாளர்கள், கிராம மக்கள், யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்ல தலைவர் சி.தில்லைநாதன், கரலற்றோரின் குரல் அமைப்பு நிறுவுனர் கோமகன், பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் நமது உழைப்பு நிறுவுனர் தனபாலசிங்கம், உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் உயிரிழப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

காய்ச்சலும், வாந்தியும் ஏற்பட்ட நிலையில் திடீரென மயங்கி விழுந்த இளைஞன் ஒருவர் நேற்றையதினம் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிந்துஜன் (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் - கீரிமலை பகுதியில் தங்கி இருந்து வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். அவரது மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண சட்ட மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 27ம் திகதி சனியன்று ஆரம்பமானது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத் துறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்து சடடமாணிப் பட்டத்தை வழங்குகின்ற ஒரு உயர் கல்வி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

அதன் கல்விப்பணியின் பிறிதொரு மைல்கல்லாக யாழ்ப்பாணத்தில் சட்ட மாநாடு ஒன்றை நடாத்த விரும்பியது. அதற்கமைய இந்தியாவின் புகழ் பெற்ற சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவனத்துடன் இணைந்து 27, 28 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் யாழ்ப்பாண சட்ட மாநாடு என்னும் பெயரிலான மாநாட்டினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்தன. அந்தவகையில் 27ம் திகதி சனிக்கிழமை நிகழ்வானது ஆரம்பமாகியது.

யாழ்ப்பாண சட்ட மாநாடானது நெருக்கடிகளுக்கூடான வழிகள் என்னும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டின் நோக்கங்களாக சட்டப் பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்ளைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக்குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சிகளை கலந்துரையாடுவதற்கான களமொன்றை அமைத்தல், சட்டப் புலமையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரையும் அவர்களின் ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்தல், எழுத்திலுள்ள சட்டத்திற்கும் அதன் செயற்பாட்டிற்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்கு சடடத்துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் மாண்புமிகு சட்டமா அதிபர் திரு. சஞ்சய் ராஜரட்ணம் அவர்களும் கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவிச் செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதல் நாள் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இலங்கையின் புகழ்பூத்த ஜனாதிபதி சடடத்தரணி கலாநிதி கனகீஸ்வரன் அவர்களினதும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா அவர்களினதும் சிறப்புரைகள் இடம்பெற்றது.







இலங்கையில் பகிரங்க சட்டத்தின் எதிர்காலம்: நெருக்கடிகளும் சவால்களும் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தனியாருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பது என்ற விவசாய அமைச்சரின் கருத்தானது மனவேதனையளிக்கிறது என்கிறார் முத்து சிவமோகன்

நெல் சந்தைப்படுத்தல் சபையை விடுத்து தனியாருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பது என்பது தொடர்பான விவசாய அமைச்சரின் கருத்தானது மனவேதனையளிக்கிறது என இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்தார்.

31.01.2024 அன்று கிளிநொச்சியில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இந்த காலபோக செய்கையில், விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் அரசாங்கத்திடம் இழப்பீடு கேட்டு நிற்கின்ற நேரத்தில் அரசாங்கம் நெல்லையும் கொள்வனவு செய்யாது தனியாருக்கு வழங்கினால், தனியார் நினைத்த விலையில் கொள்வனவு செய்வார்கள்.

தனியார் இன்னும் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வார்கள். இதன் காரணமாக விவசாயிகளே பாதிக்கப்படுவார்கள் எனவும் மேலும் தெரிவித்தார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சாந்தனும் தமிழ் அரசியலும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள், முப்பது ஆண்டுகளின் பின் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டாலும் தொடர்ந்தும் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். தண்டிக்கப்பட்டவர்களில் இந்தியப் பிரஜைகளாக இருப்பவர்கள் முழுமையாக விடுதலை செய்யப்பட்டு விடார்கள்.

அவர்கள் ஒருவராகிய பேரறிவாளனை விடுவிக்கக் கோரி அவருடைய தாயார் அற்புதம் அம்மாள் தொடர்ச்சியாகப் போராடினார். ஒரு முதிய தாயின் மகத்தான போராட்டம் அது. ஒரு தாய் அதுவும் முதிய தாய் தனது மகனுக்காக எப்படித் தொடர்ச்சியாகத், தளராது, விட்டுக் கொடுப்பின்றிப் போராடலாம் என்பதற்கு பேரறிவாளனின் தாய் ஒரு முன்னுதாரணம்.

ஈழப் போராட்ட பரப்பில் அன்னை பூபதி அவ்வாறு மகத்தான தியாகத்தைச் செய்தார். அவர் தன்னுடைய மகனுக்காகப் போராடவில்லை. போரில் தியாகி ஆகிய தன் மகனைப் போன்ற பல மகன்களுக்கும் மகள்களுக்குமாக, மக்களுக்குமாக அவர் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். பூபதிக்கு அடுத்தபடியாக அற்புதம்அம்மாள் ஒரு முன்னுதாரணமாகக் காணப்படுகிறார்.

முடிவில் பேரறிவாளனும் உட்பட இந்திய பிரஜைகள் தமிழக அரசால் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஈழத் தமிழர்கள் சிறப்பு முகாம்களில் தொடர்ந்தும் வைக்கப்பட்டார்கள். அதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால் அதுபோன்ற பாரதூரமான வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு விடுதலை அல்லது மன்னிப்பு வழங்கப்பட்ட பின் அவர்கள் இந்திய மண்ணில் தொடர்ந்தும் தரித்திருப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதாகும். சட்டச் சிக்கல் காரணமாக சம்பந்தப்பட்ட நான்கு ஈழத் தமிழர்களும் நாடு கடத்தப்பட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது.எனினும் அவர்கள் நாடு கடத்தப்படவில்லை. அவர்கள் மீண்டும் திருச்சி சிறப்பு முகாமில் கடந்த 15 மாதங்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்புதிய சிறப்பு முகாமானது இதற்கு முன்பு அவர்கள் வைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமுடன் ஒப்பிடுகையில் வசதிகள் குறைவானது. அங்கே ஒரு சிறிய அறைக்குள் இருவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 15-க்கும் குறையாத காவலர்கள் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். அந்த அறையோடு கழிப்பறையும் குளியலறையும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் அறையை விட்டு வெளியே வருவதற்கான தேவைகள் குறைவு. அதற்கு முன் இருந்த சிறப்பு முகாமில் அவர்கள் காலை 6 மணிக்கு வெளியே வந்தால் மாலை 6:00 மணி வரையிலும் நடந்து திரியலாம் உடற்பயிற்சி செய்யலாம் நூலகத்திற்கு செல்லலாம் பிரார்த்தனைகளில் ஈடுபடலாம். ஆனால் புதிய முகாமில் அந்தளவு வசதிகள் இருக்கவில்லை அது ஒரு புதிய வகைத் தண்டனையாக அவர்களுக்கு அமைந்தது. ஏற்கனவே நோயாளியாகிய சாந்தன் இப்பொழுது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் அளவுக்கு நோயாளி ஆகிவிட்டார். சிறைவைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரையிலும் அவருடைய தாயார் அவரைப் பார்க்கவில்லை. முதிய தாயார் விமான பயணங்களை செய்ய முடியாத அளவுக்கு ஆஸ்துமா நோயாளியாக இருக்கிறார்.

விடுவிக்கப்படாத நான்கு ஈழத் தமிழர்களும் இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும். ஆனால் அதில் மூவர் இலங்கைக்கு வர விரும்பவில்லை. அவர்களுடைய உறவினர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கிறார்கள். அதனால் அவர்கள் அந்தந்த நாடுகளுக்குப் போக விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் இந்திய சட்டங்களின்படி அவ்வாறு தமிழகத்தில் இருந்து ஏனைய நாடுகளுக்கு செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை என்று கூறப்பட்டு, அவர்கள் தொடர்ந்தும் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவராகிய சாந்தன் நாட்டுக்குத் திரும்ப விரும்புகிறார். தனது தாய், சகோதரர்களோடு தனது காலத்தைக் கழிப்பதற்கு விரும்புகிறார். அவர் ஒர் ஆன்மீகவாதி போலாகிவிட்டார் என்று அவருடைய வழக்கறிஞர்களும் உறவினர்களும் கூறுகிறார்கள். ஆனால் அவர் சன்னியாசியாக இருந்தாலும் அவரை நாட்டுக்குள் வர விடுவதற்கு இலங்கை அரசாங்கம் தயாரா என்பதுதான் இங்குள்ள முக்கிய கேள்வி ஆகும்.

பேரறிவாளனைத் தொடர்ந்து, சாந்தனம் உட்பட ஏனையவர்கள் விடுவிக்கப்பட்ட பொழுது, அவர்கள் தொடர்பாக, அப்பொழுது இலங்கை அமைச்சராக இருந்த ஒருவர் கருத்து தெரிவித்திருந்தார். அவர்கள் நாட்டுக்குத் திரும்பி வந்தால் இங்குள்ள சட்டங்களின்படி விசாரிக்கப்படுவார்கள் என்று அந்த அமைச்சர் உரையாற்றியிருந்தார். அதாவது அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்படும் நிலைமைகள் உண்டு என்று பொருள். இதனை சாந்தனின் வழக்கறிஞர்களும் அந்த வழக்கில் ஈடுபாடு கொண்ட தமிழக சட்டச் செயற்பாட்டாளர்களும் அப்பொழுது சுட்டிக் காட்டியிருந்தார்கள்.

எனவே இது விடயத்தில் முடிவெடுக்க வேண்டியது இலங்கைதான். இலங்கைத் தீவின் விலை விவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சுந்தான். எனவே, அது தொடர்பாக முடிவுகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்பந்தங்களை பிரயோகிக்க வேண்டியது நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். இந்த அடிப்படையில் சாந்தனின் குடும்பத்தவர்கள் நாட்டில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் உரையாடியிருக்கிறார்கள். சில அரசியல் செயற்பாட்டாளர்கள் விக்னேஸ்வரனும் உட்பட தமிழ் மக்கள் பிரதிநிதிகளோடு இதுதொடர்பாக உரையாடியிருக்கிறார்கள். பல மாதங்களுக்கு முன்பு ஒரு நீண்ட மின்னஞ்சல் விக்னேஸ்வரனுக்கு அனுப்பப்பட்டதாகவும் அதற்கு அவர் இன்றுவரை பதில் கூறவில்லை என்றும் ஒரு தகவல் உண்டு. யாருமே அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் உரையாற்றியது; அறிக்கை விட்டது; சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரைச் சந்தித்து ஆறுதல் கூறியது, என்பவற்றிற்கும் அப்பால் எந்த ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அது தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் இருக்கவில்லை.

சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரோடு உரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமந்திரன் ஒருவர். அதன்பின் அவர் அது தொடர்பாக ஜனாதிபதியோடு பேசியதாகவும், ஆனால் ஜனாதிபதி தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய விளைவுகளையிட்டுப் பயப்பட்டதாகவும் மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் அவருடைய பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இப்பொழுது சாந்தன் நோயாளியாகி விட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தவர்கள் விவகாரத்தை மீண்டும் - 15 மாதங்களின் பின் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறீதரன் தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு ஒரு கடிதம் எழுதியதாகத் தகவல். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ் இந்திய துணை தூதரகத்திற்கு ஒரு கடிதம் எழுதியதாகத் தகவல். கடிதத்துக்கு இந்திய துணைத் தூதரகம் பதிலளித்திருப்பதாகவும் ஒரு தகவல். சாந்தனைத் திருப்பி அனுப்புவதற்கான பேப்பர் வேலைகள் நடந்து கொண்டிருப்பதாகத் துணைத் தூதரகம் பதில் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாந்தனைத் திருப்பி அனுப்புவதற்கு தடையாக இருப்பது எது? இலங்கைத் தீவின் வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் தான் அது தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும். சாந்தனை நாட்டுக்குள் வர விடுவது என்ற முடிவை வெளிவிவகார அமைச்சு எடுக்குமாக இருந்தால் அதற்கு வேண்டிய தற்காலிக பயண ஆவணங்களைக் கொடுக்குமாறு சென்னையில் உள்ள இலங்கை உப தூதரகத்திற்கு உத்தரவுகளை வழங்கலாம்.

சாந்தன் அல்லாத ஏனைய மூவரின் விடயத்தில் இந்திய மத்திய அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது. அவர்களை புலம்பெயர்ந்த நாடுகளுக்கு செல்ல அனுமதிப்பதா இல்லையா என்று. ஆனால் சாந்தனின் விடயத்தில் முடிவு இலங்கை அரசாங்கத்தின் கையில்தான் உண்டு. எனவே அதற்கு வேண்டிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை அமைப்புகளும் குடிமக்கள் சமூகங்களும்தான். யாருக்கு கடிதம் எழுத வேண்டுமோ, யாருடன் நேரடியாகப் பேச வேண்டுமோ அவர்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும்.

முடிவில், சலித்துப் போன சாந்தனின் தாயார், கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியதாகத் தெரிகிறது. தேவானந்தா நீதி அமைச்சரோடு அதுபற்றி உரையாடியதாகக் கூறப்படுகிறது. மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜன் ராமநாதனும் இந்த விடயத்தில் அக்கறை காட்டியிருக்கிறார். சிறீதரன் வெளிவிவகார அமைச்சரோடு தொலை பேசியில் உரையாடியதாக ஒரு தகவல்.

அதாவது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் மட்டுமன்றி அதற்கு வெளியே நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடயத்தில் அக்கறை காட்டியிருப்பதாகத் தெரிகிறது. சிலசமயம் அது பயன்தரக்கூடும். ஆனால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்திருக்க வேண்டிய ஒரு செயற்பாடு அது. கடந்த 15 மாதங்களாக அவர்கள் பொருத்தமான விதத்தில் பொருத்தமான தரப்புகளை அணுகியிருக்கவில்லை என்று தெரிகிறது. அதாவது அது தமிழ்த் தேசிய அரசியலின் செயலின்மையைக் காட்டுகிறது.

---

## தமிழ் படிப்போம்

அன்னைத் தமிழை அழிக்காதே!
அதன் ஆணிவேரை அறுக்காதே!
பொன்னைப் போலக் காப்போமே!
பண்ணும் பரதமும் கற்போமே!
தைப்பொங்கல் செய்வதை மறக்காதே!
தமிழ்ப் பண்பாட்டை புதைக்காதே!
பிள்ளைகள் தமிழ்கற்க மறுக்காதே!
பிறந்த பொன்நாட்டை ஒறுக்காதே!
மேலோர் கீழோர் பார்க்காதே!
மேன்மைத் தமிழை வெறுக்காதே!
மதங்கள் வேறாய் இருந்தாலும்
மங்காத் தமிழில் இணைவோமே!
ஆடலும் பாடலும் இனத்தின் மாட்சி
அவற்றை மறந்தால் எமக்கு வீழ்ச்சி
தலைமைப் பண்பை வளர்த்திடு
தலைவனாய் நிமிர்ந்து நின்றிடு
எத்தனை மொழியும் கற்றுக்கொள்
எம்தமிழை முதலாய் ஏற்றுக்கொள்
தமிழைத் தாழ்வாய் நினைக்காதே!
தாயின் கருவைப் பழிக்காதே!
உந்தன் மண்ணைத் தொட்டிடேன்
எந்தன் மண்ணை விட்டிடேன்
எல்லா மொழியும் வாழட்டும்
எம்தமிழே எம்மை ஆளட்டும்
எமக்கும் வேண்டும் விடுதலை
உமக்கும் தெரியும் அதன்விலை
தமிழை நீயேன் படிக்க வேண்டும்?
தாய்ப்பால் ஏன் உன்பிள்ளை குடிக்கவேண்டும்?
தாய்ப்பால் குடித்தால் உன்பிள்ளை உரம்பெறும்
தமிழைப் படித்தால் எம்மொழி வளம்பெறும்..

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# ஆலய வங்கி கணக்கிலே பணம் சேமிப்பதல்ல எமது நோக்கம் என்கிறார் ஆறு.திருமுருகன் அவர்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன் -

ஆலய வங்கி கணக்கிலே பணத்தை சேமித்து வைத்து வங்கி புத்தகங்களை பார்த்து பெருமை கொள்பவர்கள் அல்ல நாங்கள் என தெல்லிபளை துர்க்கதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

தெல்லிப்பளையில் அமைக்கப்பட்ட துர்க்காதேவி வீட்டுத் திட்ட திறப்பு விழாவில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் வாழுகின்ற நமது சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என சிந்தித்து செயலாற்றி வருகின்றோம். அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எங்களை நல்ல முறையில் ஆற்றுப்படுத்திய காரணத்தால் எங்களுடைய சிந்தனை முழுவதும் தர்ம காரியம் செய்வதிலேதான் அக்கறையாக இருகின்றது.

பம்பலப்பிட்டி சரவஸ்வதி மண்டபத்திலே யோகர் சுவாமிகள் தினம் ஒன்றிலே நான் உரையாற்றி முடிந்ததும் இலங்கை மத்திய வங்கியிலே பணியாற்றிய ஒருவர் என்னை வந்து சந்தித்தித்து.

அதன்போது தெல்லிப்பளை புகையிரதப்பாதை அருகில் 40 பரப்பு காணி உள்ளது உங்களிடம் இந்தக் காணியை ஒப்படைத்தால் ஏதாவது தர்ம காரியத்திற்கு பயன்படுத்துவீர்களா என என்னிடம் கேட்டார்.

எங்களிடம் ஒப்படையுங்கள் எங்களுடைய இல்லப் பிள்ளைகள் திருமணம் ஆகி இல்லற வாழ்வில் இணையும் போது அவர்களுக்கென்று ஒரு வீட்டினை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எங்களிடம் உள்ளது. பெற்றோரை உறவுகளை தெரியாமல் சிறு வயது தொடக்கம் எங்களுடன் வளர்ந்த பிள்ளைகளுக்கு நாங்கள் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் உள்ளது அதனால் உங்களுடைய இந்தக் காணியை எங்களிடம் ஒப்படையுங்கள் என பணிவுடன் தெரிவித்தேன்.

எனது கோரிக்கையினை ஏற்று அடுத்த வாரமே இந்தக் காணியினை எங்களிடம் அவர் ஒப்படைத்தார்.

மிகவும் பற்றையாகவும் எல்லைகள் எது என்று தெரியமாலும் இருந்த இந்தக் காணியை சிறந்த முறையிலே துப்பரவு செய்து எல்லைப்படுத்தி தூய்மையாக வைத்திருந்தோம்.

இந்தக் காணியை நாங்கள் பெற்றுக் கொண்டுள்ளோம் என அறிந்த சுங்கத்திணைக்களா. பொண்னையா நீங்கள் பெற்றுக் கொண்ட காணிக்கு அருகில்தான் எனது காணியும் உள்ளது அதனையும் நான் தருகின்றேன் ஏதாவது தர்ம காரியத் திற்கு பயன்படுத்துங்கள் என தனது காண-ியினையும் எங்களிடம் ஒப்படைத்தார்.



இவற்றில் முதல்கட்டமாக பொன்னையா எங்களிடம் ஒப்படைத்த காணியில் எங்கள் இல்லப்பிள்ளைகளுக்கு 6 வீடுகளை கட்டி இல்லற வாழ்வில் இணையும் போது ஒப்படைத்தோம்.

அதன் பின்பு மேலும் மூன்று வீடுகளை கட்டி இல்லற வாழ்வில் இணைந்த எமது இல்லப் பிள்ளைகளுக்கு ஒப்படைத்துள்ளோம்.

மேலும் 4 புதிய வீடுகளை தற்பொழுது கட்டி எமது அன்பான இல்லப் பிள்ளைகளுக்கு இவற்றை ஒப்படைக்கவுள்ளோம்.

தமது உறவுகள் யார் என்று கூட தெரியாமல் சிறு வயது தொடக்கம் எங்களிடம் வளர்ந்த எங்கள் பிள்ளைகளை இல்லற வாழ்வில் இணையும் போது ஒன்றும் இல்லாமல் வெறுங்கையுடன் அனுப்பி வைக்க எங்களுக்கு மனம் இடம் தரவில்லை.

நான் தெல்லிப்பழை தூக்கா தேவியின் நிழலில் வளர்ந்தனான் வெறுங்கையோடு திருமணமாகி சென்றேன் என ஒரு பிள்ளையும் மனம் கலங்கி ஏங்க கூடாது என்ற சிந்தனை எனது மனதில் ஆழமாக பதிந்தது.

இதனால் எங்கள் இல்லப் பிள்ளைகள் குறைவின்றி இல்லற வாழ்வில் இணைய வேண்டும் என்று நாங்கள் இந்த வீட்டுத் திட்டப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம்.

வீட்டுத் திட்ட பணிகளை நாங்கள் ஆரம்பிக்கும்போது பணத்திற்கு என்ன செய்வீர்கள் என பலரும் கேட்டார்கள் அம்பாள் ஏதாவது ஒரு வழி காட்டுளாள் என்று நம்பினேன் அதுபோலவே எங்கள் தர்ம காரியங்களுக்கு எங்கள் நாட்டிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் அன்னையின் பக்தர்களும் எங்களுக்கு தாமாக முன்வந்து உதவுகின்றார்கள்.

எங்கள் பணிகளை அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு மனமுவந்து உதவி செய்கின்றார்கள்.

இன்று யாழ்பாணம், கண்டி, கொழும்பு மட்டக்களப்பு, மொறட்டுவ என பல பல்கலைக்கழகங்களில் எங்கள் பிள்ளைகள் படிக்கின்றார்கள் ஏனைய சாதாரண பிள்ளைகளைப் போலவே எங்கள் பிள்ளைகளும் கல்வி கற்க நாங்கள் சகல உதவிகளையும் செய்கின்றோம்.

இது போன்ற தர்ம காரியங்களை பார்த்து பொறாமைப் படக்கூடாது இது போல இன்னும் இன்னும் பல தர்ம காரியங்களை செய்ய வேண்டும் என்று மனதிலே அனைவருக்கும் ஊக்கம் வர வேண்டும்.

அன்னை சிவத்தமிழ் செல்வியிடம் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஒருமுறை கேட்டார் உங்களுக்கு பின்பு இந்தப் பணிகளை யார் செய்வது என அதற்கு அம்மா அவர்கள் எனக்கு அருகில் இருக்கும் திருமுருகன-ிடம் கேளுங்கள் என பதில் சொன்னார்.

எனக்கு பெரிய பொறுப்பு இருந்தது அன்னையின் பணிகளை குறைவின்றி முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனை எனது மனதில் ஆழமாக ஊறிக் கொண்டது.

எங்களுக்கு அப்பாற்பட்ட எங்கள் அம்பாளின் சக்தி எங்களை இயக்குகின்றது அதன் வழி நடந்து நாங்கள் தர்ம காரியங்களை செய்து வருகின்றோம்.

எங்கள் தர்ம காரியங்களை சரிவர உணர்ந்தவர்கள் எங்களுக்கு அம்பாளின் பெருங் கருணையால் ஏதோ ஒருவகையில் உதவுகின்றார்கள்.

இல்லப் பிள்ளைகளுக்கு கட்டப்பட்டுள்ள இந்த வீட்டுத் திட்டத்திலே ஒரு சிறிய விளையாட்டு மைதானத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களும் உள்ளது அதற்கும் எங்கள் அன்னை யாரோ ஒருவர் மூலம் எங்களுக்கு உதவி செய்வாள் என்ற நம்பிக்கை உள்ளது.

எங்கள் பணி அனைத்தும் நமது சமூகத்திற்கு எங்களால் முடிந்த தர்ம காரியங்களை செய்வதுதான். ஆலய வங்கி கணக்கிலே பணத்தை நிரப்பி வைத்து விட்டு நான் தலைவர், நான் செயலாளர், நான் பொருளாளர் என நமக்கு நாமே பெருமை பேசிக் கொள்வதில்லை.

அன்னை சிவத்தமிழ் செல்வி காட்டிய வழியில் எங்கள் அம்பாளின் ஆசியுடன் எங்கள் தர்ம காரியங்கள் தொடரும் என்றார்.

# இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கைக்கு அனுப்பக்கோரி தமிழக முதல்வருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்



மறைந்த பாரதப் பிரதமர் கௌரவ.ராஜீவ் காந்தி அவர்களின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு, 32 வருட சிறைத்தண்டனையின் பின் கடந்த 2022.11.11 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், முருகன், ரொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுதொடர்பில் சாந்தனின் தாயாரால் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை மேற்கோள் காட்டி அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"32 ஆண்டுகால சிறைத்தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அவ்வழக்கிலிருந்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளான சாந்தன், முருகன், ரொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்றுவரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.


SIVAGNANAM SHRITHARAN M.P.
PARLIAMENT

தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக்காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 33 ஆண்டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒருதடவையாவது தனது மகனை நேரில் பார்வையிட வேண்டும் எனவும், அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவனசெய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருக்கும் தாங்கள், இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும், அவரது குடும்பத்தினரின் உணர்வுநிலைப்பட்ட எதிர்பார்ப்பைக் கருத்திற்கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்".

- என்று தமது கடிதத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இந்தியாவின் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட சாந்தன் இலங்கை திரும்ப நடவடிக்கை எடுக்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியிடம் வேண்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்



இந்தியாவின் உச்ச நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட சாந்தன் இலங்கை திரும்ப விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியுடன் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய சிறையில் 32 ஆண்டுகள் சிறைவாசம் இருந்த நிலையில் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டும் நாடு திரும்ப முடியாது தவிக்கும் தனது மகனின் வருகைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சாந்தனின் தாயார் விடுத்த கோரிக்கையின் பெயரில் இந்தியாவின் மத்திய, மாநில அரசுகளின் உதவியை கோரியுள்ள அதே நேரம் இலங்கை அரசு சார்பில் வழங்க வேண்டிய அனுமதிகளை நீதி அமைச்சரிடம் இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டது.



இதன் அடிப்படையில் அமைச்சர் உடனடியாக இந்தியாவில் உள்ள துணைத் தூதர் வெங்கடேஸ்வரன் ஊடாக அவரது வருகைக்கான ஏற்பாடுகளிற்கான அனுமதிகளிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக வாக்குறுதியளித்துள்ளதோடு துணைத் தூதரிடமும் நேரில் பேசுமாறு அறிவுறுத்தினார்.

இதற்கமைய இந்தியாவில் உள்ள இலங்கைக்கான துணைத் தூதர் வெங்கடேஸ்வரன் மேற்பொள்ளும் நடவடிக்கை தொடர்பிலும் தொடர்புகொள்ளப்பட்டது.

இதற்கமைய சகல ஆவணமும் தயாரித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு உடன் அனுப்பி வைக்கப்பட்டு அந்த அனுமதி பெறப்பட்டதும் இலங்கை வருவதில் தடை இருக்காது என உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

## மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் நிலையமொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானம்

(31-01-2024)

மன்னார் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் நிலையமொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் கீழ் 47 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் ஆறு கூடுதல் விசை யாழிகளை நிறுவுவதன் மூலம் மின்சார உற் பத்தியை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை தனியார் துறை முதலீட்டாளர்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

மேலும் 20 வருட கால செயல்பாட்டுக் காலத்தோடு தொடர்புடைய மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வரை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியை பயன் படுத்த முடியாது என்பதால் குறித்த திட்டத்திற்கு தனியார் முதலீட்டை நாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## மன்னார் கடற்பரப்பிற்குள் நுழைந்த நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 18 இந்திய மீனவர்கள் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை



(31-1-2024)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் கடந்த புதன் (31) மன்னார் நீதி மன்றத்தினால் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் மன்றில் புதன்கிழமை (31) 3 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டது.

பணிப்பாளரின் அனுமதியின்றி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டமை, இலங்கை கடற்பரப்பில் கடற் தொழிலில் ஈடுபட்ட மை, மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை மடி தொழில் முன்னெடுத்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டது.

குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணைக்கு உட்படுத்திய நீதவான் 1 ஆம் மற்றும் 2 ஆம் குற்றச்சாட்டுகளுக்கு 12 மாதங்களும், 3 ஆவது குற்றச்சாட்டுக்கு 6 மாதங்களுக்கு விதிக்கப்பட்டு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை வழங்கப்பட்டு இவர்களை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் படகிற்கு குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இதன் போது அன்றைய தினம் படகின் உரிமையாளர் மன்றில் முன்னிலையாகுமாறு மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் ஊடக மிரிஹான நிலையத்துக்கு அனுப்பப்பட்டு நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு டோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் 18 பேர் கடந்த 16ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 கடற் தொழிலாளர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு டோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற் தொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



அவர்களிடம் விசாரணைகளின் பின்னர் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் 17 ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் திருகேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா தொடர்பாக முன்னாயத்த கூட்டம்!



(01-02-2024)

மன்னார் திருகேதீஸ்வரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா தொடர்பாக முன்னாயத்த கூட்டம் புதன்கிழமை 31ம் திகதி (31-01-2024) மாலை மன்னார் மாவட்ட செயலக பழைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் திருகேதீஸ்வர ஆலய தலைவர், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மன்னார் நகரப் பிரதேச செயலாளர், அரசாங்க உயர் அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், கலாச்சார உத்தியோகத்தர்கள், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர் வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழா மற்றும் அன்றையதினம் ஆலயத்துக்கு வருகை தர உள்ள பல லட்சக்கணக்கான பக்தர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் முக்கிய முடிவுகள் நிறைவேற்றப்பட்டன.



விசேட பஸ் சேவை நடத்துதல், உணவு வசதிகளை வழங்குதல், குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தல், மருத்துவ வசதிகளை வழங்குதல், ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு வசதிகளை செய்துகொடுப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## மன்னார் மாவட்டத்தில் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வின் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்



இந்த ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்ட மன்னார் பிராந்திய ஊடகவியலாளர்கள் சிலர் இலங்கையின் சுதந்திர தினத்தை பகிஸ்கரிக்கும் படி பல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஆனால் அரசாங்க அதிபர் உட்டப ஏனைய அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமையாக இதை எண்ணி தங்கள் பங்கை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு மன்னார் மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான முன் ஆயத்த கலந்துரையாடல் புதன்கிழமை (31) காலை 10.45 மணி அளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் முப்படை அதிகாரிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் மன்னார் மாவட்டச் செயலகம் உள்ளடங்களாக அரச திணைக்களங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய சுதந்திர தின நிகழ்வுகள் குறித்தும் அரசாங்க அதிபரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அன்றைய தினம் இடம்பெற உள்ள மர நடுகைகள், மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அரச அதிபர் தலைமையில் விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்வரும் 4ஆம் திகதி காலை சுதந்திர தினத்தையொட்டி படையினர் மற்றும் பாடசாலை மாணவர்களினால் முன்னெடுக்கப்படவுள்ள அணிவகுப்பு மரியாதை நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஒத்திகை நிகழ்வாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்ட மன்னார் பிராந்திய ஊடகவியலாளர்கள் சிலர் இலங்கையின் சுதந்திர தினத்தை பகிஸ்கரிக்கும் படி பல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஆனால் அரசாங்க அதிபர் உட்டப ஏனைய அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமையாக இதை எண்ணி தங்கள் பங்கை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது என தெரிவித்துள்ளனர்.



## விடத்தல் தீவு கடற்கரையில் தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது

(30-02-2024)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கடற்கரையில் தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய இழுவை படகையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக்குளம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

விடத்தல் தீவு மக்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களால் திங்கட்கிழமை (29) இரவு கைது குறித்த மீனவர்கள் கடலில் வைத்து பிடித்துள்ளனர்.



இந்த நிலையில் விடத்தல் தீவு இறங்கு துறையில் இழுவை படகு நிறுத்தப் பட்டுள்ளதோடு, மேலதிக நடவடிக்கைக்காக 5 மீனவர்களும் வலைகளும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைக்காக மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.

# அண்மையில் கனடாவில் மறைந்த "அருட்கவி" ஞானகணேசன் அவர்களிற்கான அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்த கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம்







அண்மையில் கனடாவில் காலமான முன்னாள் கனடா கவிஞர்கள் கழகத்தின் தலைவரும் கனடா எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் பொருளாளருமான“அருட்கவி“ ஞானகணேசன் அவர்களிற்கான அஞ்சலிக் கூட்டத்தை 28-01-2024 கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

கனடா கவிஞர் கழகத்தின் தற்போதைய தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கனடா கவிஞர்கள் கழகத்தின் அங்கத்தவர்கள் பலரும் கனடா எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் பலரும் தத்தம் குடும்பத்தோடு கலந்து கொண்டு மறைந்த “அருட்கவி“ அவர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

அங்கு உரையாற்றிய பலரும் மறைந்த கவிஞரும் எழுத்தாளருமான “அருட்கவி“ ஞானகணேசன் அவர்களின் கவிதைகளில் கலந்து வரும் இசை மற்றும் சமூகத்தின் மீதான அக்கறை, உருக்கத்துடனான ஆன்மீகப் பார்வை ஆகியவை தொடர்பாகவும் நண்பர்களை மதிக்கும் பெருந்தன்மை மற்றும் உபசரிப்பில் உயர்ந்து நின்ற பெருமிதம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

கனடா எழுத்தாளர் இணையத்தின் சார்பில் முன்னாள் தலைவர்களான ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் குரு அரவிந்தன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

## Premier of Ontario Dough Ford and his Cabinet Ministers and MPPs made an Official Visit to S & B Pallets Ltd in Scarborough

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் மற்றும் அமைச்சர்கள் மற்றும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக ஸ்காபுறோ நகரில் நடத்திவரும் S & B Pallets Ltd தொழிற்சாலைக்கு விஜயம் செய்தனர்












30-01-2024

செவ்வாய்க்கிழமை கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் கௌரவ டக் போர்ட் அவர்களும் மற்றும் அவரது அமைச்சரவை அமைச்சர்களான ரேமண்ட் சோ மற்றும் விஜய் தணிகாசலம் மற்றும் மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரிஸ் பாபிகியன் மற்றும் டேவிட் ஸ்மித் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக ஒன்றை மேற்கொண்டு ஸ்காபுறோ நகரில் தமிழ் இளைய சகோதரர்கள் திரு விஜய் கோணேஸ்வரன் தலைமையில் நடத்திவரும் **S & B Pallets Ltd** என்னும் வெற்றிகரமான தொழிற்சாலைக்கு விஜயம் செய்தனர். இந்த நிறுவனம் , இளம் தமிழ் கனடிய சகோதரர்களுக்குச் சொந்தமானது, திரு. விஜய் கோணேஸ்வரன் அவர்களின் தலைமையில்.. ஒன்ராறியோவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியதற்காக விஜய் கோணேஸ்வரன் மற்றும் அவரது சகோதரர்களுக்கு ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் கௌரவ டக் போர்ட் அவர்கள் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். படங்கள்: சத்தியன் மற்றும் ஐயா4யு




SARAS SEWING INSTITUTE CANADA
SARAS
தையற் பயிற்சி நிலையம்
Saree Blouse Only in 4 Classes
இப்பயிற்சியை முற்றாக முடிப்பவர்களுக்கு
(Full Course) Certificate வழங்கப்படும்.
Sewing Classes Followed by Scientific Method
Morning Class: 10:00 AM
Evening Class: 4:00 PM
(Morningside & Military Trail)
LUXMY VARATHARAJAN
(416) 716-9183

# டுறம் தமிழ் ஒன்றியத்தின்
# Evolving Eldercare - In-Home Support For Seniors I "வயது ஆகும்"
# முதியோர் பராமரிப்பு - மூத்தவர்களுக்கான வீட்டு ஆதரவு-இலவச சேவை

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support" எனும் சமூக சேவையை அறிமுகப்படுத்துகிறது, இது 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய முதியவர்களுக்கு தன்னார்வ அடிப்படையிலான தகுதியான சேவைகளை வழங்குகிறது.

## OUR FREE SERVICES

- Meal Delivery
- Transportation
- Volunteer Drop-offs:
  - -Grocery Assistance
  - -Doctors Appointments
- Friendly Visits
- Light House Keeping Assistance

## SERVING 8 AREAS

- Pickering
- Ajax
- Whitby
- Oshawa
- Clarington
- Brock
- Uxbridge
- Scugog

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு

### உணவு விநியோக சேவை

(இலவசம்)

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

Servicing Eight Municipalities In Druham

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington, Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

கூடுதல் தகவலுக்கு எங்கள் இணையதளத்தை பார்வையிடுங்கள்: dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## தன்னார்வலர்கள் தேவை!
## Volunteers Needed!

டுறம் தமிழ் ஒன்றியம் வழங்கும் -வளரும் முதியோர் பராமரிப்பு-வீட்டில் ஆதரவளித்தல் (Evolving Elder Care In-Home Support)

### Our Free Services :

பின்வரும் சேவைகளை டுறம் பிராந்தியத்தின் முதியோர்களுக்கு வழங்க தன்னலவாளர்கள் தேவை.

- Meal Delivery
- Transportation
- Volunteer Drop-offs:
  - -Grocery Assistance
  - -Doctors Appointments
- Friendly Visits
- Light House Keeping Assistance

### 8 Municipalities:

டுறம் பிராந்தியத்தின் பின்வரும் 8 நகராட்சிகளில் வசிக்கும் முதியோர்களுக்கு சேவை வழங்க தன்னலவாளர்கள் தேவை..

- Pickering,
- Ajax,
- Whitby,
- Oshawa,
- Clarington,
- Brock,
- Uxbridge,
- Scugog.

### Training:

- தன்னலவாளர்களுக்கு அஜாக்ஸில் உள்ள கம்ப்யூடெக் கல்லூரியில் இலவச தன்னலவாளர்பயிற்சி மற்றும் முடித்ததற்கான சான்றிதழ் வழங்கப்படும்.
- Basic CPR மற்றும் முதலுதவி பயிற்சி
- 50 Hதன்னார்வ மணிநேர வாய்ப்பு
- Free Vulnerable Check
- Volunteer Travel Expense $0.58/ per km | தன்னார்வ பயணச் செலவு $0.58/1 கிமீவழங்கப்படும்

### Contact us

எங்களின் தொடர்புக்கு

(647) 968-9549

(647) 286-9549


சேவை செய்ய விரும்பும் தன்னார்வலர்கள் எங்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்:

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# மரண அறிவித்தல்

பிறப்பு: 14 - 06 - 1943



இறப்பு: 29 - 01 - 2024

# திரு. சண்முகம் தியாகராஜா

**யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன், ஜேர்மனி Berlin, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் தியாகராஜா அவர்கள் 29-01-2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும்,

கிருகாம்பாள் (கிருபா) அவர்களின் பாசமிகு கணவரும்,

ரோகிணி, தியாகசீலன் (நியூசிலாந்து), பாமினி, அஜந்தன், சேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அயனரிகுமார் (கண்ணன்), அனுசியா (நியூசிலாந்து), ரவிதரன், வானதி, நிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

அஜித், கிஷோத், விஜித், தக்ஷியா, தஸ்மிகா, துளஷிகா, நிவேதா (நியூசிலாந்து), சுவேதா (நியூசிலாந்து), மாயா, நேகா, வருண், நிலா, யாதிவ், அக்ஷயா, டானியல் ஆகியோரின் பாசமிகு பேரனும்,

காலஞ்சென்றவர்களான குணரெட்ணம், விஜயரெட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்றவர்களான அன்னம்மா, நல்லம்மா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், வாமதேவன், மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான சிறிபதி, பூபதி மற்றும் மகபதி (சுவிஸ்), வளர்மதி (Holland), சரஸ்வதி (ஜேர்மனி), தனலஷ்சுமி, பாலரஞ்சினி, ஜெயமதி, திருநயனி, தேவகாந்தினி, கலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்,

காலஞ்சென்ற கிருபானந்தன் (ஜேர்மனி), கிருஷ்ணவேணி, தனபாலசிங்கம், காலஞ்சென்ற கிருஷ்ணராணி, கிருஷ்ணரதி, கிருஷ்ணகோபால், காலஞ்சென்ற கிருஷ்ணபாஸ்கரன், கிருஷ்ணநாதன், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணவாசன், கிருஷ்ணமாலா மற்றும் மகேந்திரராணி, தயாநிதி (இலங்கை), ரஞ்சனி (இலங்கை), ஜெயகுமார், அம்பிகையன், சுசிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சம்பூரணன், சுயம்புலிங்கம் (கலைச்செல்வன்), தவராசா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 03-02-2024 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை இல. 384 Finley Ave. Ajax, ON L1S 2E3 இல் அமைந்துள்ள Ajax Crematorium & Visitation Centre இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 04-02-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணி வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று, இதே முகவரியில் தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:**

**ரோகிணி (மகள்): (647) 271-4945 | தியாகசீலன் (மகன்): +64221664444**
**பாமினி (மகள்): (647) 642-8379 | அஜந்தன் (மகன்): (416) 666-3014**
**சேந்தன் (மகன்): (647) 808-9444 | அயனரிகுமார் (கண்ணன்) (மருமகன்): (647) 500-2049**
**ரவிதரன் (மருமகன்): (416) 201-1928**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட இலங்கையில் பெப்ரவரி 04 – தமிழர் தேசத்தின் கறுப்புநாள் என ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

எதிர்வரும் மாசி 04ஆம் திகதி அன்று, சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக பல்கலைக்கழக மாணவர்கள் அனுஷ்டிக்க அழைப்பு விடுத்துள்ளனர். அந்தவகையில் இன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் உள்ளதாவது,

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே.

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத்திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04. 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களிற்கான அரசியல்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4, 2024 ஆம் நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம் - என்றுள்ளது.

# சிங்கள தேசத்தின் அடக்குமுறையிலிருந்து தமிழர்கள் விடுபடும்வரை அவர்களின் உரிமைக் குரலை எவரும் நசுக்கமுடியாது என்கிறார் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



(கனகராசா சரவணன்)

ஜனாதிபதி உலகத்துக்கு ஒரு ஜனநாயக குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக் கொண்டு தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைகளாக அடிமைபடுத்திக் கொண்டிருக்கின்றார். எனவே தமிழர்கள் இந்த சிங்கள தேசத்தின் அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும்வரை தமிழ் மக்களின் உரிமை குரலை எவரும் நசுக்கமுடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் சூழுரைத்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவு தூபியில் 2022 நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ்க்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்காக அவர் புதன்கிழமை (31) மட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜராகி பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

வடகிழக்கு பூராகவும் எங்கள் மக்களை பிழையாக வழிநடத்தும் செயற்பாட்டிற்கு நீதிமன்றங்களை பொலிசார் பிழையாக வழிநடாத்திக் கொண்டிருக்கின்றனர் உண்மையில் என்னத்திற்கு எதற்கு தடைவிதிக்கவேண்டும் என தெரியாமல் சட்டத்துக்கு முரணான விடையங்களுக்கு வடகிழக்கில் அனுமதி கொடுக்கப்பட்டு எங்களுடைய இறந்த உறவுகளை நினைவு கூர்வதற்கு இந்த தடை உத்தரவை பிறப்பிக்கின்ற செயற்பாடு வடகிழக்கில் வருடா வருடம் நடைபெற்றுக் கொண்டிரு க்கின்றது.

அதற்காக மாமாறி மாறி வருகின்ற அரசுக்கள் தங்களின் ஆட்சியை தக்கவைப்பற்காக தங்களுக்கு ஏற்றவகையில் சட்டங்களை பிறப்பித்து தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமை குரல் நசிக்கிவருகின்றனர்.

அதனடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக 5 சட்டங்கள் கொண்டுவரப்பட்டது அதில் நிகழ் நிரல் சட்டம் பிரதானமானது அது தமிழ் மக்களின் குரலை நசிக்கும் சட்டமாக இருக்கின்றது இந்த ஜனாதிபதி உலகத்துக்கு ஒரு ஜனநாயக குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக் கொண்டு வடகிழக்கு தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைபடுத்திக் கொண்டிருக்கின்றார் என்பதை எங்கள் மக்களும் சர்வதேசமும் விளங்கி கொள்ள வேண்டும்.

காசாமீது இஸ்ரேல் நடாத்திவரும் இனபடுகொலையை உடன் நிறுத்தவேண்டும் என தென்ஆபிரிக்க சர்வதேச நீதிமன்றில் கோர அந்த அறிக்கையை ரணில் ஆதரிக்கின்றார் என்றால் இவரின் இரட்டை வேடம் சர்வதேச மட்டத்தில் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதை மக்களும் புத்தி ஜீவிகளும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆகவே இந்த சட்டங்கள் எல்லாம் பிறப்பிக்கப்படுவது இந்த ஆட்சியையும் அரசையும் தக்கவைப்பதற்காக 1948 இந்த நாட்டில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறிய பின்னர் சிங்கள ஆட்சியாளர்களிடம் இந்த அதிகாரம் போன பின்னர் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை தொடர்ந்து அடிமைகளாக அடிமைப்படுத்தி கொண்டிருக்கின்றனர்.

எனவே தமிழர்கள் இந்த தீவில் இருந்து அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும்வரை தமிழ் மக்களின் உரிமை குரலை எவரும் நசுக்கமுடியாது என்பதுடன் எந்தவிதமான தடைகள் வந்தாலும் தொடர்ந்து பயணிப்போம் என்றார்.

# கரைச்சி பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்குகள் தரமற்றவை. சட்ட விரோத செயற்பாடுகளுக்கு அவையும் காரணம் – அமைச்சரிடம் முறையிட்ட பிரதேச மக்கள்



பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்குகள் தரமற்றவை எனவும், சட்ட விரோத செயற்பாடுகளுக்கு அவையும் காரணம் எனவும் பிரதேச மக்கள் அமைச்சரிடம் முறையிட்டுள்ளனர்.

இடம்பெற்ற கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் இவ்வாறு பிரதேச மக்களால் அமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையால் கிராமத்தில் முக்கிய பகுதிகளில் வீதி மின் விளக்குகள் அமைக்கப்பட்டது. அவை குறுகிய காலங்களில் ஒளிராமல் பழுதடைந்துள்ளது.

தரமான மின்விளக்குகளிற்கு உத்தேச அளவீடு மேற்கொண்டு நிதி ஒதுக்கி பின்னர் தரமற்ற மின்விளக்குகளை பொருத்தியுள்ளார்களென சந்தேகிக்கிறோம்.

இதற்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். முக்கிய இடங்களில் மின்விளக்குகள் இவ்வாறு எரியாமையால் குற்ற செயல்கள் நடக்கிறது. வாள்வெட்டு சம்பவங்களும் நடக்கிறது.

அண்மையில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி சென்ற பேருந்து மறிக்கப்பட்டு வாள்வெட்டு சம்பவமும் இடம்பெற்றது. இவ்வாறான குற்ற செயல்கள் அண்மையில் அதிகரித்துள்ளது.

முன்னர் கிராமத்துக்கு பொறுப்பாக பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த போது குறைவாக இருந்தது. கிராமங்களில் மேற்கொள்ளப்படும் அபிருத்திகளிற்கான அரச நிதிகள் வீணாகின்றது.

சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்துள்ளது. மதுபானங்களின் விலை அதிகரிப்பினால் இந்த சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்துள்ளது.

கசிப்பினை அருந்திய நபர் ஒருவர் நீண்ட காலமாக சுயநினைவிழந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இதனால் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி அவ்வாறானவர்களுக்கு வீணாக செலவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத கசிப்பினை கட்டுப்படுத்தாமையினால் அரச நிதி இன்னொரு விதமாக வீணான மருத்துவ ரீதியில் செலவாகின்றது. இவ்வாறன விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கிராமங்களிற்கிடையிலான சந்திப்புக்கள் மூலம் தீர்வு காண திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம்!

கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

புதிதாக கரைச்சி பிரதேச செயலாளராக பொறுப்பேற்ற பிரதேச செயலாளர் T முகுந்தன் அமைச்சரை வரவேற்றார். தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமானது.




குறித்த கூட்டத்தின் தலைமை உரையை அமைச்சர் நிகழ்த்தியதை தொடர்ந்து திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

அரசினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 80 மில்லியன் ரூபா கிடைக்கப்பட்டுள்ள நிலையில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்கு 47 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளடங்கலாக 60 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அன்றைய தினம் அனுமதிக்காக மும்மொழியப்பட்டுள்ளது.



குறித்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், கிராம சேவையாளர்கள், கிராம மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் ஒரு இளைஞரைக் காணவில்லை என தேடும் உறவினர்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாணம் இணுவிலை சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவரைக் காணவில்லை என அவரது உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் தேதி வியாழக்கிழமை மதியத்திலிருந்து குறித்த இளைஞன் காணாமல் போய் உள்ளதாக அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இளைஞர் காணாமல் போன தினத்தில் மஞ்சள் நிற டீசேர்ட் மற்றும் கறுப்பு நிற அரைக்காற்சட்டை அணிந்திருந்ததாக இளைஞனின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரைப் பற்றிய தகவல் அறிந்தாலோ அல்லது இவரை எங்காவது கண்டாலோ சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது இளைஞரது உறவினர்களது தொலைபேசி இலக்கங்களான 772690673 அல்லது 0776523229 அறிவிக்குமாறு உறவினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் பொலிசார் தொடர் கசிப்புவேட்டை — உற்பத்தி நிலையம் முற்றுகை — 65 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது — 15 பீப்பாக்கள் மீட்பு



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள அம்பளாந்துறை பாடசாலை வீதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் சட்டவிரோ கசிப்பு உற்பத்தி நிலையத்தைன்று வியாழக்கிழமை அன்று (01-02-2024) மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினர் முற்றுகையிட்டதையடுத்து கசிப்பு உற்பத்தியல் ஈடுபட்ட ஒருவரை 85 போத்தல் கொண்ட 65 லீற்றர் கசிப்புடன் கைது செய்ததுடன் 15 பீப்பாக்கள் மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டு ஒப்படைத்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிசார் தெரிவித்தனர்.

யுக்தி தேசிய நடவடிக்கையின் கீழ் கொக்கட்டிச்சோலையில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிக்கும் திட்டத்தில் மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான்னவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினம் இன்று பகல் குறித்த வீதியிலுள்ள கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனனர்.

இதன் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்து 85 போத்தல் கொண்ட 65 லீற்றர் கசிப்பும் 15 பீப்பாக்கள் மற்றும் உற்பத்திக்கான உபகரணங்களை மீட்டு கொக்கட்டிச்சோலை பொலிசரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்துக்கு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான சென்று இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரையும் கைப்பற்றப்பட்ட கசிப்பு மற்றும் பீப்பாக்களை பார்வையிட்டு பொலிசருக்கு பாராட்டு தெரிவித்து தொடாந்தும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை கண்டுபிடித்து கைது செய்யுமாறு ஆலோசனைகள் வழங்கினர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# கட்டு துப்பாக்கி வெடித்ததில் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலைய உத்தியோத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்



கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

01.02.2024 தினம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குற்ப்பட்ட கோரமோட்டை பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அப்பகுதிக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் குறித்த செயற்பாட்டில் ஈடுபட்ட சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஒடியுள்ளார்.

அதன் பொழுது அவரை கைது செய்யும் நோக்கில் துரத்திச் சென்ற வேளை மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுதுவக்கு வெடித்ததில் 37 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# *மன்னார் மீனவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறியா?*

**- நடராசா லோகதயாளன் -**



*மன்னார் மாவட்டத்தில் 163 கிலோ மீற்றர் நீளம்கொண்ட கடலும் 5 ஆயிரத்து 200 படகுகளும் உள்ளபோதும் 2023 ஆம் ஆண்டு 23 ஆயிரத்து 298 மெற்றிக்தொன் கடல் உற்பத்தியினையே எட்ட முடிந்துள்ளது.*

*மன்னாரில் தற்போது 11 ஆயிரத்து 94 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 133 மீனவ மக்கள் வாழ்கின்றனர். இங்கே 13 ஆயிரத்து 653 மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். மாவட்டத்தில் 1983 ஆம் ஆண்டு 1900 படகுகள் மட்டுமே காணப்பட்டது. இந்த எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 200 படகுகளாகி தற்போது 5,200 படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதில் 253 ரோளர் படகுகளும் உள்ளன. ரோளரில் மீன்பிடி மட்டுமன்றி அட்டை, சங்கு மடி வலைகளும் பயன்படுத்தப்படுவதாக திணைக்களம் கண்டுகொண்டுள்ளது.*

*இலங்கையில் ரோளர் மீனபிடி 2017 முதல் சட்டப்படி தடை செய்யப்பட்ட தொழில் முறைமையாகவுள்ளபோதும் மன்னாரிலும் இடம்பெறுகின்றது.*

*தடை செய்யப்பட்ட ரோளர் போன்று மன்னார் மாவட்ட மீன்பிடியில் காணப்படும் மற்றுமோர் பாரிய நெருக்கடியாக டைனமற் தொழில் முறையும் அதிகளவில் இடம்பெறுகின்றது. டைனமற் மூலம் மீன்பிடித் தொழில் அதிகமாக பனங்கட்டிக்கொட்டு, பள்ளிமுனைப் பகுதிகளில் மேற்கொள்வதாகவே கடற்றொழில் திணைக்களம் அடையாளமிடுகின்றது.*

*இவ்வாறு சட்டவிரோதமாக டைனமற்றை பயன்படுத்துபவர்கள் டைனமற்றை இந்தியாவில் இருந்தும் களணி பாய்வூட் கொம்பனியில் இருந்து திருட்டுத்தனமாகவும் ஜெலற்றீனைப்பெற்று தமக்கேற்ற வகையில் டைனமற்றை தயார் செய்கின்றனர்.*

*இவை இரண்டிற்கும் அப்பால் மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய நெருக்கடிகளில் ஒன்றாக இந்திய மீனவர்களின் விசைப்படகுகளின் வருகையும் காணப்படுகின்றதாக மன்னார் தாழ்வுப்பாட்டைச் சேர்ந்த மீனவ அமைப்புக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இதேநேரம் பேசாலையைச் சேர்ந்த மீனவர் எட்வேட் தகவல் தெரிவிக்கையில், 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மாவட்டத்தின் கடல் உற்பத்தி 25 யிரம் மெற்றிக்தொன்னைத் தாண்டி 26 ஆயிரத்தை நெருங்கியது இருந்தபோதும் அதன் பின்பு கொரோனா மற்றும் எரிபொருள விலை ஏற்றம் காரணமாக கடலில் இறங்க முடியவில்லை. நாள. ஒன்றிற்கு தொழிலிற்குச் செல்ல 80 லீற்றர் மண்ணெண்ணை போதாத நிலையில் அதன் விலைக்கான மீனைக்கூட பெற முடியவில்லை.*

*இவை ஒருபுறம் என்றால் மறுபுறத்தே மாவட்டத்தையே ஆக்கிரமிக்கும் காற்றாடிகளை அமைக்கும் செயலாள் 2023 ஆம் ஆண்டு மாரி மழையின்போது கடலிற்கு மழைநீர் செல்ல முடியவில்லை. ஏனெனில் கடலிற்கு நீர் செல்லும் 14 இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு காற்றாலை அமைக்கப்பட்டதனாலேயே இம்முறை மழையின்போது அதிக நீர் நீண்ட நேரம் கடற்கரையில் தேங்கியது. அதன்பின்பு அவசர அவசரமாக மாற்று இடங்களில் வாய்க்கால் தோண்டியே நீர் வெளயேற்றப்பட்டன. இதனை அதிகாரிகள் கூற மாட்டார்கள் ஏனெனில் தாம் தவறான அனுமதிகளை வழங்கியமை அம்பலமாகி விடும் என்பதனால் வாய்மூடி மௌனிகளாகவே உள்ளனர் என்கின்றார்.*

*இவ்வாறு கடற்றொழிலிலாளர்கள் அடுக்கும் குற்றச் சாட்டுகள் தொடர்பில் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் வினாவியபோது, இந்திய மீனவர்களின் அத்து மீறல் மற்றும் ஜெலற்றீன் எடுத்து வருவது தொடர்பில் கடற்படையினருக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றன. அவற்றை கடற்படையினரே பிடிக்க முடியும் இந்திய மீனவர்களை கைது செய்து எம்மிடம் தருபவர்களை நாம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துகின்றோம்.*

*அதேநேரம் டைனமற் உட்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகளிற்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். இதிலே 2021 ஆம் ஆண்டு 119 வழக்குகளும், 2020 ஆம் ஆண்டு 40 வழக்குகளும், 2023 ஆம் ஆண்டு 57 வழக்குகளும் தாக்கல் செய்துள்ள அதேநேரம் இந்த ஆண்டின் முதல் மாதம் மட்டும் 15 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் சுட்டிக் காட்டுகின்றது.*

*இவை இவ்வாறிருக்க மன்னார் தாழ்வுப்பாட்டுல் ஓர் ரின்மீன் தொழிற்சாலை இயங்குகின்றது. இங்கே மாதம் ஒன்றிற்கு 5 லட்சம் மீன்ரின் தயாரிக்க இலக்கு வைக்கப்படுவதாகவும் இருந்தபோதும் 4 லட்சத்தை தாண்டிய ரின்மீன் உற்பத்தி இடம்பெறுவதாக அந்த உற்பத்தி நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*

*இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவு ஆனால் கடல் உணவுகள் இறக்குமதியிலும், ரின்மீன் பாவனையிலும் தங்கியிருக்கும் அவலத்தில் உள்ளபோதும் எம்மவர்கள் உண்ணாத உணவை உற்பத்தி செய்து ஏற்றுமதிக்கு அனுப்ப போட்டியிடுகின்றோம் கேட்டால் அப்போதுதான் நாட்டிற்கு டொலர் வரும் என்னும் அதிகாரிகள் இறக்குமதி செய்பவை இலவசமாகவா வருகின்றது என்பதற்கு பதிலளிக்க வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் கடல் கரைகளையே காணவில்லை அனைத்தும் கடல் அட்டைப் பண்ணைகளாகிவிட்டது. தற்போது மன்னாரிலும் முளைக்கின்றது இந்தநிலையே மன்னாரிலும் ஏற்படுமோ என்ற அச்சம் உள்ளது. கடலும் கடல்தொழிலாளியும் உள்ளபோதும் அந்தப் பெயரை வைத்து யாரோ வாழ்கின்றனர் மீனவனின் வாழ்வு மட்டும் விடியவில்லை என வங்காலையைச் சேர்ந்த பிரான்சிஸ் தெரிவிக்கின்றார்.*

# தமிழரசுக் கட்சியின் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலான தவறுகள் புதிய தலைவரினால் சீர் செய்யப்படவுள்ள வாய்ப்புக்கள் மிக அரிதே!

- நக்கீரன்

(1) தமிழ் மக்கள் இது வரை அடைந்த துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரன் சிவஞானம் தெரிவித்துள்ளதாக செய்தியொன்று எழுதப்பட்டுள்ளது. அத்துடன் அவர் தெரிவிற்கான வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சி சென்று அங்கு மாவீரர்களின் நினைவிடங்களுக்குச் சென்று அவர்களுக்கு மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்தினார். அங்கு அவர் உரையாற்றும் போது "மாவீரர்களின் கனவு நனவாகும் வரை நாம் உழைப்போம்" என்று தெரிவித்துள்ளார்.

பதில்: "தமிழீழக் கனவு" மே 18, 2009 அன்று கனவாகவே போய்விட்டது. தலைவர் பிரபாகரனால் முடியாமல் போன தமிழீழத்தை சிறிதரன் வென்று தருவார் என்பது பகற்கனவு. இன்றைய பூகோள அரசியலில் இலங்கைத் தீவில் இன்னொரு தனியரசு சாத்தியமில்லை. அதனை எந்தவொரு பேரரசோ அல்லது பிராந்திய அரசோ ஆதரிக்காது. காரணம் இந்த நாடுகள்தான் தமிழீழ விடுதலைப் புலிகளை துடைத்து அழித்தவர்கள். 13ஏ திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கரடியாகக் கத்திக் கொண்டிருக்கிறோம். இலங்கை - இந்திய உடன்பாட்டை எழுதிய இந்தியாவே இப்போது கைவிரித்து விட்டது. "இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. 13ஏ திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை எங்களால் வற்புறுத்திக் கேட்க முடியுமே ஒழிய அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள்தான் ஒற்றுமாக இருந்து இலங்கை அரசுக்குப் போராட வேண்டும்". இதுதான் தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களிடம் இந்தியாவின் புதிய தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா சொன்ன செய்தி! 13ஏ திருத்தத்துக்கே நாம் தவண்டை அடிக்கும் போது தமிழீழக் கனவு நினைவாகும் என எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமா? காசாவை இஸ்ரேல் படைகள் தரை, வான் மார்க்கமாக குண்டு போட்டு துவம்சம் செய்கிறது. இந்த கணம் வரை 26,000 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். இரண்டு மடங்கு பேர் படுகாயம் அடைந்துள்ளார்கள். ஆனால் தென்னாபிரிக்கா ஒன்று மட்டும் காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லி சர்வதேச நீதிமன்றத்தை நாடியுள்ளது. சாதகமான தீர்ப்பு வந்தாலும் அது ஒரு தார்மீக வெற்றியாக மட்டுமே இருக்கும். சர்வதேச நீதிமன்றத்துக்கு தண்டிக்கும் அதிகாரம் இல்லை.

(2) அதற்கு முன்பதாக திருகோணமலையில் அவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முடிவுகள் வெளியாகிய பின்னர் சுமந்திரன் போன்ற அனைவரோடும் சேர்ந்து தமிழர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உழைப்போம் என அறைகூவல் விடுத்துள்ளார். ஆனால் சுமந்திரன் அவர்களோ மாவீரர்களின் கனவு "கனவாகவே போகட்டும்" என்று சபதம் எடுத்தவர். "விடுதலைப் புலிகளின் பல அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகளை தவறு என்று இன்னமும் உரத்த குரலில் சொல்லித் திரிகின்றவர். இவ்வாறானவர் எவ்வாறு சிறிதரன் சிவஞானம் அவர்களோடு சேர்ந்து அரசியல் செய்யப்போகின்றார் என்பது எம்மால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

பதில்: சுதந்திரன் அவர்கட்கு மட்டுமல்ல, சிந்திக்கத் தெரிந்த, பூகோள அரசியலைத் தெரிந்தவர்களுக்கு அது கனவாகத்தான் தெரியும். ஆகாயத்தில் கோட்டை கட்டுபவர்களுக்கு மட்டும் அது நனவாகத் தெரியும். தலைவர் பிரபாகரனால் அடைய முடியாத தமிழீழத்தை மற்றவர்கள் பெற்றுத் தருவார்கள் என்பது பகற் கனவு. சிறிதரன் மக்களை உசுப்பேத்த தமிழீழத்தை கையில் எடுத்துள்ளார். ஆனால் தமிழரசுக் கட்சி தமிழீழம் கேட்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கையில் வட கிழக்கு பிரதேசத்தில் ஒரு இணைப்பாட்சி அரசை மட்டும் கேட்கிறது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இதஅக கைவிட்டு விட்டது!

(3) தமிரசுக் கட்சி ஆரம்பிக்கப்பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் வரை தலைமை வகித்த எவராலுமே தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கையான "சமஸ்டி"யை வென்றெடுக்க இயலவில்லை. அவர்களது பாராளுமன்ற அரசியல் நகர்ந்து சென்ற காலத்தை விட எமது விடுதலை இயக்கங்களின் நாற்பது வருடத்திற்கும் மேலான ஆயுதப்போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களாக விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்தோடு பாராளுமன்ற சென்று அமைதியாக இருந்து விட்டு பின்னர் விடுதலை புலிகள் இயக்கம் மீதான தாக்குதல்கள் 2009ம் ஆண்டு நடத்தப்பட்ட பின்னர் அவர்களின் பாராளுமன்ற அரசியல் எந்தப் பக்கம் சென்றது என்பதற்கு அப்போதை தலைவர்கள்: அடையாளங்களாக" இன்னும் விளங்குகின்றார்கள்.

பதில்: 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வி.புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. "நாங்கள் எதைப் பேசச் சொல்கிறோமோ அதைத்தான் நீங்கள் நாடாளமன்றத்தில் பேச வேண்டும். நடக்க வேண்டும். இதன் காரணமாத்தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2000 இல் கொண்டுவந்த "பிரதேசங்களின் ஒன்றியம்" என்ற மூல யாப்பு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. இந்த யாப்பு நீலன் திருச்செல்வன் மற்றும் ஜிஎல் பீரிஸ் இருவரும் வரைந்தது. இந்த யாப்புப் பற்றி பிற்காலத்தில் அன்டன் பாலசிங்கம் "எல்லா அரசியல் தீர்வு யோசனைகளை விட சந்திரிகாவின் வரைவு யாப்பு உச்சம்" என்று திருவாய் மலர்ந்தார். கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்!

(4) முக்கியமாக தங்களிடம் கேள்விகள் கேட்பதற்கு மக்களைத் தவிர "ஒருவரும்" இல்லை என்று எண்ணிக்கொண்டு ரணிலின் அரசாங்கத்தையும் அவரையும் காப்பாற்றத் துணிந்த அரசியல் "சாணக்கியத்திற்கு" பரிசாக தற்போது சாணக்கியன் என்னும் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டியுள்ளார். அவரது அரசியல் நகர்வு மற்றும் பாராளுமன்ற பிரசன்னம் போன்றவை. தமிழரசுக் கட்சியின் பல அங்கத்தவர்கள் நினைப்பது போன்றே. "அரசியல் அறிவு" மற்றும் "ஆங்கிலப் புலமை" சர்வதே பயணங்களின் அனுபவங்கள்" என்ற அவர்களது பார்வை மழுங்கியதாகத் தெரியவில்லை.

பதில்: ஒன்றும் புரியவில்லை. சிறிசேனா - இரணில் அரசை உருவாக்குவதில் தமிழ்மக்கள்தான் பங்களிப்பு கணிசமாக இருந்தது. அந்த நல்லாட்சி அரசியல் வந்தபடியால் தான் வட கிழக்கில் இராணவம், விமானப்படை, கடற்படை கைப்பற்றி இருந்த 47,000 ஏக்கர் காணியை விடுவித்தோம். பலாலி விமான நிலையம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்டது. 217 அரசியல் கைதிகளில் 112 கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். ஒரு அரசியல்வாதிக்கு "அரசியல் அறிவு" மற்றும் "ஆங்கிலப் புலமை" தேவையில்லை என்பது உங்களது வாதமா?

(5) இவ்வாறு "சுமந்திரன் ஒருவரே சர்வதேசம் வரை சென்று வாதிட்டு பேசக்கூடியவர்" என்று கூறுகின்றவர்கள். விடுதலைப் புலிகள் தங்களிடத்தில் கொண்டிருந்த மக்கள் ஆதரவும். இராணுவ பலத்தையும் அவர்கள் நடத்திவந்த அரசியல் நகர்வுகளையும் மறந்தும் மறைத்தும் தங்கள் அரசியலை நடத்துவதும் ஏன் என்று எமக்கு புரிந்து கொள்ள முடியவில்லை.

பதில்: எல்லாம் சரி. முடிவு என்ன? முள்ளிவாய்க்காலில் நடந்த போரில் வெற்றியா?

(6) இவ்வாறான "மாயைகள்" நிறைந்த தமிழர்களின் எதிர்கால அரசியலில் தமிழரசுக் கட்சி என்ன பங்கு வகிக்கப்போகின்றது என்பதற்கு அரசியல் அவதானிகளும் காத்திருப்பது போலத் தெரிகின்றது. அவர்களைப் போன்றே நாமும் காத்திருப்போம். எனினும். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான சிறிதரன் சிவஞானம் தனது உரையில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாம் காத்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

பதில்: நாமும் காத்திருக்கிறோம். எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சிறிதரன் சவாரி செய்தால் சரி.

(7) அவர் தனது உரையில் "தமிழ்களின் தேசிய அபிலாசைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற்பட்டுள்ளது. நாம் இழந்த ஆத்மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தை தருகிறன. நாம் எந்த நோக்கத்துக்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை. சிங்கள மக்களுக்கு முன்பே நமது தமிழினம் இங்கு வாழ்ந்துள்ளது. நாம் இங்கு பல அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கிறோம்.

பதில்: இன்று தங்களை சிங்களவர்கள் எனக் கூறுபவர்கள் நாகர்களின் வழித்தோன்றல்களே. இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அரசு இருக்கவில்லை. யாழ்ப்பாண இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் (கிபி 1012) தோன்றியது. கிபி 1619 இல் போர்முனையில் இரண்டாவது சங்கிலி போர்த்துக்கேயரால் தோற்கடிக்கப்பட்டான்.

(8) ஆகவேதான் இழந்த இறைமையை தான் நாம் மீண்டும் பெற போராடுகின்றோம். எமது மொழி இடம் கலை பண்பாட்டு இவைகள் எமது தமிழ் தேசிய அடையாளத்தை பற்றியுள்ளது. நாம் பல சவால்களை சந்தித்து இன்னும் மனிதர்களாக இருக்கிறோம் என்றால் நாம் அறத்தின் மீதும் தர்மத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். இலங்கை அரசுக்கு ஒரு செய்தியை கூறுகின்றோம்" என்று அவர் தனது உரையில் கூறுகின்றார்.

பதில்: இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனிநாட்டுக் கோரிக்கையை 1983 பின்னர் கைவிட்டுவிட்டது. இன்று இணைப்பாட்சியை கட்சி கோருகிறது. "ஆகவேதான் இழந்த இறைமையை தான் நாம் மீண்டும் பெற போராடுகின்றோம்" என்று சிறிதரன் சொல்லியிருப்பது கட்சிக் கொள்கைக்கு முரணானது. அது அவரது சொந்தக் கருத்து என்று எடுத்துக் கொண்டிருக்கலாம்.

(9) ஆனால் நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் இடம்பெறுவது இனங்களுக்கிடையிலான போட்டி அல்ல. ஆள்கின்றவர்களுக்கும் ஆளப்படுகின்றவர்களும் இடையிலான போட்டி என்பதை எமது புதிய தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியானது பல தடவைகள் ஆள்கினறவர்களாக தமக்குத் தெரிந்த தலைவர்களைக் காப்பாற்றியது. இது கடந்த காலத்திலும் அண்மைக் காலத்திலும் இடம்பெற்ற தவறுகள்" என்பதை தமிழரசுக் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான் நாம் குறிப்பிட்டுச் சொல்கின்றோம்.

"தமிழரசுக் கட்சியின் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலான தவறுகள் புதிய தலைவரினால் சீர் செய்யப்படவுள்ள வாய்ப்புக்கள் மிக அரிதே!" என்று.

பதில்: கடந்த அரை நூற்றாண்டில் பெரும் பங்கு (1983 - 2009) வி.புலிகளின் ஆட்சிக் காலம். தவறுகள் இடம்பெற்றிருந்தால் அதற்கு வி. புலிகளே பொறுப்பு. எடுத்துக்காட்டாக 1994 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலை வி. புலிகள் புறக்கணித்ததால் டக்லஸ் 9 இருக்கைகளைக் கைப்பற்றி நாடாளுமன்றம் சென்றார். இன்றும் இருக்கிறார். 2005 இல் சனாதிபதி தேர்தலைப் புறக்கணித்ததால் மகிந்த இராசபக்ச அரியணை ஏறினார். 2002 டிசெம்பர் 02 இல் கையெழுத்துப் போடப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தை பிரபாகரன் நிராகரித்தார். புலிகளின் காலத்தில்தான் வெலி ஓயா சிங்களக் குடியேற்றத் திட்டம் (1984-2009) நிறைவேறியது. இதன் பரப்பளவு குடாநாட்டைப் போல் இரண்டு (2460 சகிமீ) மடங்கு. இன்று வெலி ஓயா முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு பிரதேசசபை! இந்தத் தவறுகள் தவறுகளாகப் படவில்லையா? மருமகள் உடைத்தால் பொன்குடம் மாமியார் உடைத்தால் மண்குடமா?

# கச்சத்தீவு ஆலய திருவிழாவில் பாரம்பரிய கத்தோலிக்கர்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்க கோரிக்கை

- நடராசா லோகதயாளன் -







கச்சத்தீவு புனித அந்தனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு தமக்கும் தனியான அழைப்பு அனுப்பி உதவுமாறு யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயரிடம் இந்தியாவின் கச்சதீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயணக் குழு விண்ணப்பித்துள்ளது.

இது தொடர்பில் கச்சதீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயணக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சே.நல்லதம்பி ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

மீனவர்கள் பாதுகாப்பு வேண்டியும், கடல் மீன்வளம் வேண்டியும் தமிழ்நாட்டு பாரம்பரிய மீனவர்களால் கச்சத்தீவில் 1913 ஆண்டு முதல் புனித அந்தோணியார் ஆலயம் கட்டி வழிபாடு நடத்தி வருகின்றனர்.

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவின் போது பாரம்பரிய மீனவர்கள் தாய் பங்கான தங்கச்சிமடத்தில் இருந்து அருட்பணியாளர்களையும், தங்கள் குடும்பங்கள் மற்றும் உறவினர்களை அழைத்துகொண்டு நாட்டுப்படகில் கச்சத்தீவு திருப்பயணம் மேற்கொண்டு திருவிழாவை சிறப்பாக கொண்டாடி வந்தனர். இதில் இலங்கை மீனவ மக்களையும், உறவினர்களையும், அருட்பணியாளர்களையும் விருந்தினராக அழைத்து அன்பை பகிர்ந்து மகிழ்ச்சியாக கச்சத்தீவு திருவிழாவை கொண்டாடி வந்தனர்.

இந்தநிலையில் 1974 ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும் இந்திய பாராம்பரிய மீனவர்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்கும் நோக்கத்தில், கச்சத்தீவு ஒப்பந்தத்தில் உள்ள 5வது சரத்தில், கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிற்கு பாரம்பரிய மீனவர்கள் விசா உள்ளிட்ட எந்த அனுமதி இல்லாமல் குடும்பத்துடன் சென்று வழிபடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம்.

இதனடிப்படையில் தொடர்ந்து நாட்டுப்படகில் பாரம்பரிய மீனவர்கள் தங்கள் குடும்பங்களுடன், பணம் வாங்காமல் நேர்ச்சையாக தங்கள் உறவினர்களை திருப்பயணிகளாக அழைத்துக் கொண்டு கச்சத்தீவு திருவிழாவுக்கு சென்று வந்தனர்.

இது சமீபகாலமாக பணம் வாங்கிக் கொண்டு விசைப்படகில் வெளியூரிலிருந்து வரும் திருப்பயணிகளை, சுற்றுலா பயணிகளை போல் அழைத்து வரும் இராமேஸ்வரம் பங்கு பாதிரியாரின் தலைமையிலான கச்சத்தீவு விழா குழுவில் உள்ள சில நபர்களுக்கு இடையூறாக இருந்ததால், கச்சத்தீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயனத்தை 2014 ஆண்டு தடை செய்தனர்.

இதை எதிர்த்து பாரம்பரிய மீனவர்கள் தொடர்ந்து போராடினார். கடந்த 2018 ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, கச்சத்தீவு ஒப்பந்தத்தில் உள்ள பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பயண உரிமையை மீட்டு உறுதிப்படுத்தினர். இதனடிப்படையில் 2019 ஆண்டு முதல் கச்சத்தீவு பாரம்பரிய நாட்டுப்படகு திருப்பாயண குழு கச்சத்தீவு திருப்பயணத்தை மேற்கொண்டு வருகிறது. ஆனால் உயர்நீதிமன்ற ஆணையை மத்திய, மாநில அரசுகள் இதுவரை முழுமையாக செயல்படுத்தவில்லை.

இதுகுறித்து அரசு அதிகாரிகளிடம் விசாரித்ததில், இலங்கை யாழ்ப்பாணம் மேதகு ஆயர் அவர்கள் இராமேஸ்வரம் பாதிரியாருக்கும் மட்டும் தான் கச்சத்தீவு திருவிழா அழைப்பு கடிதம் அனுப்பி உள்ளார், எனவே அவர்களை மட்டுமே அங்கீகரிக்க முடியும் என அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா இருநாட்டு பாரம்பரிய கத்தோலிக்க மக்களின் நம்பிக்கை, கலாச்சாரம் மற்றும் பண்பாடு சம்பந்தப்பட்டது. எனவே இருநாட்டு பாரம்பரிய மீனவர்களின் நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்திற்கு கத்தோலிக்க திருச்சபை மதிப்பளிக்க வேண்டும். பாரம்பரிய கத்தோலிக்க மீனவர்களின் உரிமையை கத்தோலிக்க திருச்சபை புறக்கணிக்க கூடாது.

எனவே இந்த ஆண்டு இந்திய பாரம்பரிய கத்தோலிக்க மீனவர்களின் உணர்வுக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை மதிப்பளிக்கும் வகையில் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா அழைப்பிதழை கச்சத்தீவு பாரம்பரிய திருப்பயண குழுவுக்கு அனுப்பவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

# கிளிநொச்சி– யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனாவின் நிவாரண விநியோகத்தில் ஈடுபடும் ஜே.வி.பி.





இலங்கையில் சீனாவின் ஆளுமை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது என்பது புதிய செய்தி அல்ல. ஆனால், அண்மைக் காலத்தில் அது மேலும் அதிகரித்து வருவது - அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் சீனா மற்றும் அதன் சார்பு அமைப்புகள் தமது நடவடிக்கைகளை அதிகரித்து வருவது கவலையளிக்கும் விடயம் என்று பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவ்வகையில் சீனாவின் உதவிகளை மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி) வடக்கில் வழங்கியுள்ளது. கடந்த விழாயக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் 150 குடும்பங்களிற்கு சீனாவின் நிவாரணப் பொதிகள் அன்பளிப்பாக அளிக்கப்பட்டுள்ளன. சீனாவின் நிவாரணப் பொதிகளை பயணாளிகளிற்கு ஜே.வி.பி அரசியல் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் வழங்கி வைத்தார்.

இதனை வழங்கி வைத்து உரையாற்றிய சந்திரசேகரன் "எதிர் வரும் ஒக்டோபர் மாதம் உருவாகவுள்ள தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு சீனா, இந்தியா உட்பட அனைவரும் உதவ முன்வந்துள்ளனர். எமது ஆட்சியில் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளோடு சமாந்தர நிலையில் உறவுகளைப் பேணி இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுப்போம். ஒருவரை அரவணைத்து மற்றவரை புறந்தள்ளும் வேலை கிடையாது" என்றார்.

# வடக்கு இலங்கையில் இந்தியாவின் நடவடிக்கைகளை உளவு பார்க்கும் சீனாவிற்கு உதவியாக பாகிஸ்தானியர்களும் களம் இறக்கப்பட்டுள்ளனர் என்பது நிரூபணமாகின்றது







கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையில் தமிழகத்தின் சென்னை மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் இந்தியப் பிரதமர் மோடி பயணித்த சமயம் இலங்கையின் வடக்கே மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் அதிகளவு பாகிஸ்தானியர்கள் நடமாடியுள்ளனர்.

இந்தளவு பாகிஸ்தானியர்கள் வடக்கில் இதுவரை நடமாடியமை கிடையாது என வடக்கு வாழ் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனர்களின் நடமாட்டம் காணப்படும்போது அவர்களை இலகுவில் அடையாளம் காண முடிகிறது என்றும் அவர்கள் நான்கு சில்லு வாகனங்களிலும் உள்ளூர் மக்கள் போன்று மோட்டார் சைக்கிலும் பயணிக்கும் அதேநேரம், இலங்கை, இந்திய மக்களின் முக சாயலை ஒத்த பாகிஸ்தானியர்கள் தற்போது நடமாடுவது இலகுவில் கண்டுகொள்வதும் கடினமாகவே உள்ளது என்று உள்ளூர் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் ஆறிற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் ஏன், எதற்கு எனத் தெரியாது தங்கியிருப்பதோடு கொக்குவில் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய சமயம், அவர்கள் பொதுமக்களால் பிடித்து யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைத்த போதும் சிறிது நேரத்தில் பொலிசார் அவர்களை விடுவித்து விட்டனர்.

இருந்தபோதும் பல பாகிஸ்தானியர்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர். யாழில் தங்கியிருப்பவர்கள் அடிக்கடி தமது இருப்பிடத்தை மாற்றுகின்றனர்.

இதேநேரம் இவர்களின் வருகை பாரதப் பிரதமர் தமிழ் நாட்டிற்கு வந்தபோது அமைந்துள்ளமையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றமையினால் கொக்குவில் பகுதியில் நடமாடிய பாகிஸ்தானயர் ஒருவரின் அடையாள அட்டை உள்ளிட்டவற்றை பொதுமக்கள் ஒளிப்படம் எடுத்துள்ளனர்.

இதேநேரம் இவர்களுடன் இரு உள்ளூர் இஸ்லாமியர்கள் இணைந்தே நடமாடுகின்றனர். அதில் ஒருவர் கடந்த ஆண்டு பாகிஸ்தானியத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனைச் சந்தித்தபின்பு மேற்கொண்ட சந்திப்பில் மொழி பெயர்ப்பாளராக செயல்பட்டவர். இவர் சரளமாக உறுது மொழி பேசும் வல்லமை கொண்டவர். இவர் பாகிஸ்தானின் கராச்சியில் கல்வி கற்றதனால் உறுது மொழியும் கற்றுக்கொண்டார்.

இதேநேரம் யாழில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் யாழில் உள்ள இடைநிலை அரசியல்வாதகள் சிலரையும் சந்தித்துப் பேசியுள்ளபோதும் என்ன பேசினார்கள் என அறியமுடயவில்லை.

# அன்னை முத்துமாரி அருள்பாலிக்கும் புண்ணிய பூமி மாத்தளை

**- காயத்திரி விக்கிரமசிங்க**



---

**கொடியேற்றம்**
**02.02.2024 வெள்ளிக்கிழமை**

---

**தேர் திருவிழா**
**24.02.2024 சனிக்கிழமை**

---

***"உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா உன்பாதம். சரண்புகுந்தேன் - எங்கள் முத்துமாரி"***

என்று முத்துமாரியம்மையின் பெருமையைப் பாட்டில் இசைக்கின்றார் மகாகவி பாரதியார்.

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும், மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவது போல் மாத்தளை என்றதும் முத்துமாரியம்மைதான் நினைவில் வருகிறார்.



சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் குருக்கள்

அருளாட்சி நடத்தும் அன்னையாக, நர்த்தன சுந்தரியாக, சிறுமை கண்டு பொங்கும் தேவியாக, மகிஷாசுர மர்த்தனியாக, கொடுமையைக் கருவறுக்கும் காளியாக, பசிப்பிணி போக்கும் அன்னபூரணியாக, அரனுடன் கலந்த அர்த்தநாரியாகத் திருக்கோலம் காட்டும், அன்னை முத்துமாரி மாத்தளையில் குடிகொண்டு அருள்பாலிக்கின்றாள்.

மாத்தளை மலையகத்தின் தலைவாயில். இராமேஸ்வரம் கரையிலிருந்து படகுகள் மூலமும் பாய்மரக் கப்பல் மூலமும் கடலைக் கடந்து, கொடிய காடுகளுக்கிடையே கால்நடையாக உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம், எங்கள் மாத்தளை முத்துமாரி. எங்களது வரலாறு மாத்தளை முத்துமாரியம்மன் வரலாற்றுடன் இணைந்துள்ளது. வரலாற்று சிறப்பும் புராதன தொன்மையும் கொண்ட ஆலயத்தின் மாசி மகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று, சுவாமி உள்வீதி, வெளிவீதி வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

காரைநகர் ஈழத்து சிதம்பரம் மங்களேஸ்வரர் குருக்களின் பேரனும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பிரதான குருக்களான சுப்பிரமணிய குருக்களின் மருமகனும், சிவஸ்ரீ மணி சரவணபவாநந்த குருக்கள் மற்றும் சாமி விஸ்வநாத குருக்களிடம் வேதங்களை கற்றவருமான சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் அவர்களின் திருக்கரங்களினால் கிரியைகள் நடக்க திருவருள் பாலித்துள்ளது.

தமிழ் மக்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து சென்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கின்றார்கள். பிரித்தானியப் பேரரசின் போது உலகத்தின் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த தமிழக மக்கள் அங்கெல்லாம் மாரியம்மனைக் கொண்டு சென்று வழிபட்டு வருகின்றார்கள். தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், தாய்லாந்து மற்றும் பிஜி, மாட்டினிக், குவாதலோப் சென் வின்ஸ்டன், ரீ நாட்இ டுபாக்கோ, சுரிநாம், பிரெஞ் கயானா உட்பட பிரெஞ்சு மொழி பேசுகின்ற தீவுகளில் கூட மாரியம்மனைப் போற்றி கரகம்பாலித்து வழிபடும் பாங்கினை இன்று காண்கின்றோம்.

பிணிகளுக்கு மாற்றுண்டு எங்கள் முத்துமாரி பேதமைக்கு மாற்றமில்லை. எங்கள் முத்துமாரி - அடைக்கலமே புகுந்துவிட்டோம் எங்கள் முத்துமாரி என்று பாரதி பாடியதற்கொப்ப மாத்தளை மாரியம்மனிடம் அடைக்கலம் புகுந்து மலைநாட்டில் அடியெடுத்து வைத்தவர்கள்தான் எங்கள் மூதாதையர்கள்.

மாத்தளை முத்துமரியம்மையின் தெய்வீக கோலத்தில் சிந்தை இழந்து போனவர்கள் பலர். சைவபெரியார் உயர்திரு முருகேசுப் பிள்ளை, கவிஞர் நவாலியூர் சு.சொக்கநாதன், கவிஞர் ஈழவாணன், கவிஞர் வி.கந்தவனம் என அம்பிகையைப் பாடி பரவியவர் பலர்.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதக் கலவரத்தில் அசுரர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட பஞ்சரதங்களையும் மீள நிர்மாணித்து மாத்தளை நகர வீதிகளில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 1993 அம்பாள் பவனி வரப் பணி செய்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியார் மற்றும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய பரிபாலன சபை உறுப்பினர்கள் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள்.

மாத்தளை முத்துமாரியம்மன் தெய்வீகக் கோலத்தில் சிந்தை இழந்துபோன கவிஞர் நாவலியூர் சொக்கநாதன், 1964ம் ஆண்டு எழுதிய "மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி" என்ற நூலை பலரும் மறந்து போய்யிருந்த நிலையில் பெரும் பொக்கிஷம் பேணப்படுவதுடன் இளைய தலைமுறையினர் கற்றறிந்து பயன்பெறும் வகையில் மாத்தளை எச்.எச். விக்கிரமசிங்க மறுபதிப்பு செய்து 1993ம் ஆண்டு தலைவராக இருந்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியாரிடம் சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது.

உயர்திரு முருகேசுபிள்ளை அன்னை முத்துமாரியை பற்றி பகிரும் அந்தாதி ஊரில் பாடிபரவியமை குறிப்பிடத்தக்கது. மலரன்பனின் "மூங்கிலின் நாதம், தென்றலின் கீதமும்" சிலை வடித்து உயிர் கொடுத்த சிற்பி வாழனும் மலையகம் மாத்தளையில் தேரும் ஓடனும் (சீர்காழி சிவ சிதம்பரம்) "பன்னாகமம் என்னும் பொன்னகர் மாத்தளையில்" ஆவணி சதுர்த்தியில் அருளும் சக்தி என மாத்தளை வடிவேலனின் வரிகளில் சங்கீத ரத்னம், என். ரகுநாதன் அவர்களது குரலின் பாடல் ஒலிக்க, ஈழத்து ரத்தினத்தின் வரிகளில், மாத்தளையில் மாசிமாதம் திருவிழா" முதலான பாடல் காதுக்கினிய கீதமாக காற்றில் மிதந்து பக்திப் பரவசத்தை இன்றும் ஊட்டுவனவாகும்.



மாத்தளையில் மாசிமக திருவிழா என்ற பாடல் வரிகளோடு "அவள் ஒரு ஜீவநதி" என்ற திரைப்படத்தின் ஊடாக மாத்தளை தேர்திருவிழா காட்சிகளை பூஜை வழிபாடுகளை மாத்தளை காத்திகேசு பதிவுசெய்திருக்கிறார். மாத்தளை பெ. வடிவேலன் மலையகத்தில் "மாரியம்மன் வழிபாடும் வரலாறும்" உட்பட பல நூல்களைகளை எழுதி வெளியிட்டமை சிறப்பு நிகழ்வாகும்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபை தலைவர் விக்கினேஸ்வரர் சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன், மற்றும் வேலாயுதம் சுதர்ஷன், அங்கமுத்து யோகராஜா செட்டியார், கந்தையா கனகரட்ணம், வேலு அழகேஸ்வரன், அங்கமுத்து திருச்செல்வம் ஆசாரியார், வீரையா முத்துசாமி, இராமசாமி கிருஷ்ணகுமார், சுப்பையா பிரதீபன், மாரிமுத்து நாகேந்திரன், செல்லத்துரை விஸ்வநாதன், தியாகராஜா கிஷோகுமார் ஆகியோர் ஆலயத்தை சிறந்த முறையில் பரிபாலித்து வருகின்றனர்.



ஆலயபரிபாலன சபை உறுப்பினர்கள்

மாத்தளை முத்துமாரியம்மன் அருளின் அன்பின் இரக்கத்தின் கருணையின் ஒரு குறியீடு. வன்முறையும் கோரமும் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் பொறாமையும் எரிச்சலும் பிறர் வாழப்பொறுக்காத தன்மையும், சமூக வாழ்வில் நன்கு வேரூன்றி விட்ட காலகட்டத்தில் மாத்தளை முத்துமாரி அம்பிகையைத் தரிசித்து தேர்திருவிழாவில் கலந்து அன்பையும் இரக்கத்தையும் யாசிப்பது தார்மீகக் கடமையாகும்.

---

## தமிழ் படிப்போம்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

*வேழ முகனை வருந்தித் துதித்திடப்*
*பேழை வயிற்றோன் பெருநிதி தந்தே*
*கணங்கள் நெருங்கிடாக் காத்திடும் காவல்*
*கணபதி என்கவிக்குக் காப்பு.*
*"பொங்கு தமிழுக்குப் பங்கம் விழைந்தால்*
*சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"*
*செம்மொழியாம் தமிழ்மொழி எம்மினத்தின் தாய்மொழி*
*அம்மொழியின் சிறப்பை அறியா அறிவிலியே!*
*அன்னிய மொழியே ஆங்கில மொழியாம்*
*கன்னித் தமிழே எங்கள் காதல்மொழி*
*உலகின் முதன்மொழி உன்னதத் தமிழ்மொழி*
*பலரும் ஏற்றுள்ள பண்பான பாசையதே!.*
*கம்பன் இராமகதை காளிதாசன் காப்பியம்*
*அம்மன் பாட்டும் அரிச்சந்திர புராணமும்*
*தேன்தமிழில் பாடிய தேவாரம் திருவாசகம்*
*கோன்முறை அரசுசெய்த கோவேந்தர் கதைகள்*
*சிலம்பின் கதையாம் சிலப்பதிகாரம்*
*பலவும் பொதிந்து இருப்பது தமிழிலே!*
*மாதவி மகளான மணிமேகலை வாழ்க்கை*
*காதலியைக் காரிருளில் கைவிட்ட காதலன்*
*தொல்காப்பியர் தந்த தொல்காப்பிய இலக்கண நூல்*
*வில்லிபுத்தூர் அருளிய மகாபாரத இதிகாசம்*
*எட்டுத் தொகையும் ஐஞ்சிறு காப்பியம்*
*பட்டினத்தார் தந்த பந்தபாசப் பாடல்கள்*
*கலிங்கத்துப் பரணி குற்றாலக் குறவஞ்சி*
*கலித்தொகை குறுந்தொகை கைந்நிலை நாலடியார்*
*பெரிய புராணம் பாஞ்சாலி சபதம்*
*திருமந்திரம் தேனாய்த் திரவியமாய் இருக்குதே!*
*முத்தமிழின் சிறப்பையும் மூவேந்தர் கதையையும்*
*சொத்தான எமது சிறார்க்குச் சொல்லுவோம்.*
*பண்டார வன்னியன் பரம்பரை பற்றியும்*
*கண்டியைக் கட்டியாண்ட இராசசிங்கன் கதையும்*
*நல்லூரில் நல்லாட்சி செய்த சங்கிலியனை*
*செல்லக் குழந்தைக்குச் செவியில் ஏற்றுவோம்.*
*தைப்பொங்கல் விழாவை தவிர்த்திடாச் செய்வோம்*
*கூப்பாடு போட்டேனும் காப்போம் எம்மரபை*
*தஞ்சைப் பெரிய கோயிற் தனிச்சிறப்பை*
*மஞ்சு விரட்டும் மகத்தான பண்பாட்டை*
*பிஞ்சு மகவுக்குப் புரியும்படி நல்லாய்க்*
*கொஞ்சும் தமிழில் சொல்லிக் கொடுப்போம்.*
*பாரதியின் பாடல்களைப் பண்ணோடு பாடவைப்போம்*
*பாரதி தாசனின் பாக்களைப் படிக்க வைப்போம்*
*அவ்வை தந்த ஆத்திசூடி கொன்றை வேந்தன்*
*செவ்வையாக் தமிழில் செவிமடுக்க இசைப்போம்*
*திருக்குறள் வெண்பாவும் திருவெம்பாப் பாடலையும்*
*கருவில் இருக்கையில் கற்றுக் கொடுப்போம்*
*நாமறிந்த மொழிகளில் நம்மொழியே நல்லமொழி*
*சேமமுற எம்மொழியைத் தேசமெங்கும் சேர்த்திடுவோம்.*
*அப்பா அம்மாவென அழகுதமிழ்ச் சொல்லிருக்க*
*பப்பா மம்மியென்று பாழாக்க வேண்டாமே!*
*தாலாட்டுப் பாட்டைத் தமிழில் பாடியே!*
*பாலோடு சேர்த்துப் பருகக் கொடுப்போம்.*
*எந்த மொழியும் ஐயமிலாக் கற்றிடு*
*சொந்த மொழியைத் தாய்மொழியாய் ஏற்றுக்கொள்.*
*தாய்ப்பால் குடித்தால் சந்ததி உரம்பெறும்*
*தாய்மொழி படித்தால் சமூகம் வளம்பெறுமே!*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

# மன்னார் மாந்தை மேற்கில் சிறப்பாக இடம் பெற்ற முதியவர்களுக்கான விசேட மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

01.02.2024



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் முதியவர்களுக்கான விசேட மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 01-02-2024 வியாழன் காலை இடம் பெற்றது.

அடம்பன், ஆண்டாங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் மருத்துவ தேவைகளை நிறை வேற்ற முடியாத 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விசேட மருத்துவ முகாம் மற்றும் மாற்றாற்றல் உடையவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் முதியவர்களுக்கான விசேட செயற்திட்டங்களை மெதடிஸ் திருச்சபை டெவ்லிங் நிறுவனம் நடாத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக அன்றையதினம் இலவச மருத்துவ முகாம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ உபகரனங்கள் வழங்கும் நிகழ்வும் மன்னார் அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்கமன்னார் க.கனகேஸ்வரன், முன்னால் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், டெப்லிங் நிறுவனத்தின் பிரதான இணைப்பாளர் அருட்பணி. பு. அன்ரனி சதீஸ், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள், அருட்தந்தையர்கள், மெதடீஸ் திருச்சபை டெவ்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 150 மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டனர்.



குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்களுக்காக மருத்துவ சிகிச்சை உட்பட சக்கர நாற்காலி, ஊன்றுகோல் வழங்கப்பட்டதுடன் கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன அதே நேரம் உளவல ஆரோக்கியம் மற்றும் மருத்துவ ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் மருத்துவ முகாமுடன் இணைந்து இடம் பெற்றது.



குறித்த நிறுவனத்தினால் இது வரை மன்னார் மாவட்டத்தில் 10 மருத்துவ முகாம்கள் இடம் பெற்றுள்ளதுடன் மருத்துவ முகாமுக்காக 3 மில்லியன் ரூபாவும், தேவையுடையவர்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கு என 4 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்படுள்ளமை குறிப்பிடத்தகது.

## கடந்தவையும் கடப்பவையும் – (87)

கடந்தகால நினைவுகளைப் பகிரும்வேளை - விரைவாய்
நடந்து வந்த உறவுகளும் வந்துசேர

வந்தவரை மனமகிழ்ந்து ஏற்றிக்கொண்டு
நின்றஇடம் விட்டு வண்டியது விலகும்போது - கொஞ்சம்

நொந்ததுதான் மனதினோரம் சின்னதாக - இனி
எந்தநாளோ பார்ப்பேன் என்ற ஏக்கத்தாலே

வடமறவர் ஆட்சிசெய்த இடமாம் 'வடமறவர் ஆட்சி' - பின்
வடமராட்சி ஆகியதாம் மருவி இது - இங்கு

எந்த இடம் போனாலும் வந்து கொள்ளும் - மனதில்
அந்தநாள் நினைவலைகள் யானையின் மணியோசைபோல

வல்லிபுரக் கோவிலுக்கு போனாற் கூட - அங்கும்
சொல்லிக்கொள்ள எத்தனையோ கதைகளுண்டு

வல்லிபுர ஆழ்வாரிடம் போகும் முன்பே - அவர்
அவ்விடத்தில் வந்த கதைதெரிய வேண்டும்

தட்சணைகைலாய மான்மிகமும் இதை - மிக
அற்புதமாகவே சொல்கிறதாம் என்கிறார்கள்

ஆர்ப்பரிக்கும் வங்கக்கடலில் வல்லிபுர ஆழ்வார்
தீர்த்தமாடும் பகுதியிலே மச்சமொன்று - இடைவிடாது

துள்ளிக்கொண்டே இருந்ததுவாம் - அன்று
துள்ளுமதைப் பிடிப்பதற்காய் கற்கோவள கடலோடிகள்

இயன்றவரை போராடியும் முடியாது போனதுவாம் - ஆனால்
வராத்துப்பளைப் பெண்ணொருத்தி வள்ளியம்மை

நாகதோசம் பெற்றதனால் பிள்ளைப்பேறு இல்லாது
சோகம் மிகக்கொண்டு விரதம் இருந்தாளாம் - அவள்

கனவிலே கண்ணன் தோன்றி 'வருக நீ அக் கடலுக்கு' என்று கூற
மனமது மகிழ்ந்த மாது கடலினை நோக்கிச்சென்று

அதன் அருகினில் இருந்த போது
அவள் மடியினில் விழுந்த மச்சம்

அழகிய குழந்தையாக உரு மாறியதாம் - உரு
மாறிய குழந்தையைப் பார்த்து

அதிசயப்பட்ட மக்கள் பிள்ளையை - மிக
மகிழ்வோடு பல்லக்கில் ஏற்றிச் செல்லவே - ஓரிடத்தில்

பிள்ளையது மறைந்து - அங்கு
சக்கரமொன்று இருந்ததுவாம் - அச்

சக்கரத்தை மூலவராய் வைத்து அவ்விடத்தில்
கோவிலொன்று எழுந்ததுவாம்

மறவர் குலத்தலைவன் வல்லிபுரத்தேவனின்
பெயர் கொண்ட வல்லிபுரம் கிராமத்தில்

எழுந்த இக் கோவிலே 'வல்லிபுரக்கோவில்' .......


(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1085

## கைலாசநாதர் திருக்கோயில் (நல்லூர் சிவன்கோயில்) நல்லூர், யாழ்ப்பாணம

*“ வாயானை மனத்தானை மனத்துள் நின்ற*
*கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்*
*தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்*
*சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்*
*தாயானைத் தவமாய தன்மை யானைத்*
*தலையாய தேவாதி தேவர்க் கென்றும்*
*சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச*
*சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. ”*

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர்களால் நல்லையம்பதியில் பல கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆயினும் கோயில்நகரமாக விளங்கும் நல்லையம்பதியில், கைலாசநாதர் கோயிலை சிவஸ்ரீ ந.வெ. கார்த்திகேயக் குருக்கள் அமைத்துள்ளார்கள். இதற்கு ஆதாரமாக, சிவஸ்ரீ நா. சிவசுப்ரமணிய சிவாச்சாரியார் அவர்கள் அருளிய, ஸ்ரீகைலாச-புராணமும், இவ்வாலயஸ்தாபகர் சிவஸ்ரீ ந.வெ. கார்த்திகேயக் குருக்களால் எழுதப்பட்ட, தருமசாசனமும் சான்றாகக் காணப்படுகின்றன. ஆத்மார்த்தமதாக இறைவனை வழிபடும் பக்தர்களின் எண்ணத்தை நிறைவேற்ற, அந்த இறைவனே கனவில் வந்து, கட்டளை இட்ட சம்பவங்கள் பல, அடியார்கள் வரலாற்றிலே நடந்தேறியுள்ளது. இவ்வாறே, கார்த்திகேயக்குருக்கள் அவர்களின் கனவில் தோன்றிய இறைவன் இட்ட கட்டளையின் பயனாகவே, நல்லூர் சிவன்கோயில் தோற்றம் பெற்றுள்ளது.

நல்லூர் என்பது காரணப்பெயராகக் காணப்படுகின்றது. தமிழ்நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் தாம் ஆட்சி செய்த பிரதேசங்களை, நீதி நெறிமுறை தவறாத நல்ல ஊராக மாற்றி ஆட்சிசெய்துள்ளனர். இக்காரணத்தினால் தமது ஆட்சிப்பிரதேசங்களை நல்லூர் என அழைத்துள்ளனர். இவ்வாறே யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழரசர்களும், நீதிநெறி தவறாத ஆட்சியை அமைத்து நல்லூரை அதன் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். நல்லூர் என்றாலே நல்லூர் கந்தசுவாமி கோயிலும், இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய கோயில்களும் நினைவில் வந்து செல்லும்.

ஈழத்திலே திராவிடர்களின் நிலப்பகுதியாக விளங்கிய பல பிரதேசங்களில், தற்காலத்திலும் நல்லூர் என்ற பெயர் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாணத்து நல்லூர், பூநகரிப்பிரதேசத்திலுள்ள நல்லூர், குருநாகல், களுத்துறைப்பிரதேசங்களிலே தற்காலத்திலும் சிங்கள மக்களால் கூறப்படும் நல்லூருவ என்ற பிரதேசங்கள் ஆகியன, திராவிட கலாச்சாரத்தின் எச்சங்களாகக் கருதமுடியும். யாழ்ப்பாணஅரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் நல்லூரின் அமைப்பு எவ்வாறு காணப்பட்டதென்பதை, யாழ்ப்பாண வைபவமாலை மிக அழகாக எடுத்தியம்பியுள்ளது.

“நாலு மதிலும் எழுப்பிய வாசலும் ஒழுங்காய் விடுவித்து, மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் பூங்காவும், பூங்காவன நடுவிலே ஸ்நானமண்டபமும், முப்புடைக் கூபமும் உண்டாக்கி, அக்கூபத்திலே யமுனாநதித்தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு, நீதிமண்டபமும், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனாவீரரிருப்பிடம், முதலிய அனைத்தும் கட்டுவித்து... வாழ்ந்திருந்தான்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தழிழரசர்கள் கோட்டை கொத்தளங்களுடன் ஆட்சி செய்த தமிழ்பிரதேச்திலே, யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிட்டுள்ள மன்னர்களால் அமைக்கப்பட்ட கோயில்களுடன், மக்களால் அமைக்கப்பட்ட பல்வேறு கோயில்களும் அமைந்து, நல்லூர் என்ற பெயரை மேலாங்க வைத்துள்ளது.

கைலாசநாதர் கோயில் என வழங்கப்படும் நல்லூர் சிவன் கோயில், பழைய பருத்தித்துறை வீதியை முன்புறமாகக் கொண்டு காணப்படுகின்றது. இக்கோயில் அமைந்துள்ள நிலப்பகுதியை கல்வளவு என அழைப்பர். இதன் நடுவில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் வாசல்கள் கிழக்கிலிருந்து மேற்காகவும், வடக்குநோக்கியதாகவும் அமைந்துள்ளன. ஆலயத்தின் கருவறையில் மூலலிங்க ஆவுடையார் வட்டவடிவமாக நிறுவப்பட்டுள்ளதோடு, கருவறையின் விமானம் வட்டவடிவமாகக் காணப்படுகின்றது.

அர்த்தமண்டபம், மகாமண்டபம், தர்சன மண்டபம், ஸ்நபன மண்டபம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், கமலாம்பிகா, சிவகாமி சமேத நடராசர், கைலாசநாதசுவாமி, வள்ளி தெய்வயானை சமேத சுப்ரமணியர் ஆகியோருக்குரிய கோயில்களும் காணப்படுகின்றன. கமலாம்பிகையின் விமானம், சதுர வடிவமாகக் காணப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள கமலாம்பிகை, இரு திருக்கரங்களைக் கொண்டவராக எழுந்தருளியுள்ளார். சிவன், சக்தி இருவருக்குமான கருவறைகளும், தனித்தனி அர்த்தமண்டபங்களைக் கொண்டனவாக விளங்குகின்றன.

இவ்வாலயத்தின் முதலாம்பிரகாரத்திலே, நவக்கிரக கோயில் காணப்படுகின்றது. ஈஸ்வரனுடைய பெயரைப் பெற்ற சனீஸ்வரனுக்குரிய தினமான சனிக்கிழமைகளிலும், புரட்டாதி மாதத்தில் இடம்பெறும் புரட்டாதிச் சனிக்கிழமைகளிலும் மக்கள் திரண்டு, சனிபகவானை வழிபட்டுச் செல்வர். கமலாம்பிகை மற்றும் கைலாசநாதசுவாமி ஆகியோரின் கருவறைக்கு இடைப்படதாக, நடராஜர் சந்நிதி அமைந்துள்ளது. அம்பாள், சிவன் ஆகியோருக்கு தனித்தனியாக அமைந்துள்ள அர்த்த மண்டபங்களில், அம்பாள் எழுந்தருளியுள்ள கற்பக்கிரகத்தின் அர்த்தமண்டபத்தின் வலதுபக்கமாக, விநாயகர் கருவறையும், சிவனின் கருவறையின் அர்த்தமண்டபத்தின் இடது பக்கமாக, சுப்ரமணியரின் கருவறையும் காணப்படுகின்றன.

***தொடரும்...***



OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**02-02-2024 வெள்ளி தொடக்கம் 08-02-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோ'ம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர்ப் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F

(தொடர்ச்சி 26 பக்கம்)

# நான்கு வீடுகளை அமைத்து திறந்துவைத்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் சமயப் பணிகளுடன் இணைந்ததான சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக 4 வீடுகளும் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து தெய்வ திருவுருவப் படங்கள் எடுத்துச்செல்லப்பட்டு வீடுகள் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த வீடுகள் துர்க்காபுரம் மகளிர் இல்ல பெண் பிள்ளைகளுக்கு சீதனமாக வழங்கப்படவுள்ளதுடன், 2010ம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இத் திட்டத்தினூடாக ஏற்கனவே ஆலயத்தால் 9 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கூடுதல் நிதி ஒதுக்கீடு மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அவசியம் என அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து!





கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் ஜனாதிபதி - மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அவசியம் என அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து!

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமது மக்களுக்கானதாக பயன்படுத்துவதே எனது வழமை. அதற்கிணண்க்க சுமார் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஊடாக எமது மாவட்டத்திற்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இன்நிலையில் அதனை உச்ச பட்சமாக மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன் படைத்துவதையே தான் விரும்புகின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதனை உறுதிப்படுத்த வேண்டிய தேவை அதிகாரிகள் முதல் கொண்டு பொதுமக்களிடமும் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்திலின்றையதினம் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் பெப்ரவரி 4ம் திகதி நடத்தவுள்ள பேரணிக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
Tamil National People's Front
No.43, 3rd Cross Street, Jaffna Established:- 20-02-2010

பெப்ரவரி 4ம் நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு எமது ஆதரவை தெரிவிக்கின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

அந்த கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பெப்ரவரி 4ம் நாள், 76 வருடங்களுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை பிரித்தானியரிடமிருந்து கையகப்படுத்திய சிங்கள - பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தை சூறையாடிய கருப்பு நாளாகும்.

முழுத் தீவினதும் ஆட்சியதிகாரத்தினைத் தனது கையில் வைத்துக் கொண்டு, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும், தமிழ் இனவழிப்பை மேற்கொண்டும், தமிழர் தேசம் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புக்கள், அதன் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் சிங்கள பௌத்த பேரினவாதம் தொடர்ந்து வருகிறது.

முடிவின்றித் தொடரும் கட்டமைப்புசார் இனவழிப்பிலிருந்து தமிழர் தேசம் பாதுகாக்கப்படல் வேண்டுமாயின், தமிழ்த் தேசத்தின் இறைமையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு அமைய வேண்டும். இனவழிப்புக்கான பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்.

அந்தவகையில் - ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ம் திருத்தத்தினை முற்றாக நிராகரித்தமை, திம்புப் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியமை, பொறுப்புக்கூறலை வலியுறுத்தியமை உள்ளிட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையின் உள்ளடக்கமானது, இதுவரைகாலமும் சர்வதேச அரங்கில் பொறுப்புக்கூறலிலிருந்து சிறிலங்காவை பாதுகாத்தவர்களையும், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துமாறு கடிதங்களை எழுதி, தமிழ் தேசிய அரசியல் அபிலாசைகளை நீக்கம் செய்யும் வகையில் பெய்யான கருத்தியலை விதைத்த தரப்புக்களையும் அம்பலப்படுத்தியிருக்கிறது.

அந்தவகையில் - பெப்ரவரி 4ம் நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு எமது ஆதரவை தெரிவிக்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

க.சுகாஷ்,
பேச்சாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.




# அகில இலங்கை தமிழர் மகா சபையின் 10 தேசிய மாகாநாட்டில் கட்சி தலைவராக மீண்டும் கலாநிதி காசிலிங்கம் விக்கினேஸ்வரன்



**(கனகராசா சரவணன்)**

அகில இலங்கை தமிழர் மாகாசபை கட்சியின் புதிய தவைராக மீண்டும் கலாநிதி காசிலிங்கம் விக்கினேஸ்வரன். தவிசாளராக ஒய்வு நிலை பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா ஆகியேர் கட்சியின் 10 தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் 10வது தேசிய மாநாடு திருகோணமலை உப்புவெளி நிலாவெளி வீதியிலுள்ள சர்வோதயா கேர்பேர் கூடத்தில் கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன் போது கட்சியின் தலைவராக கலாநிதி காசிலிங்கம் விக்கினேஸ்வரன், தவிசாளராக ஓய்வு நிலை பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா, துணைதவிசாளர் 1, ஓய்வுநிலை பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ், துணைதவிசாளர் 2, திருமதி. சுகந்தினி நகுலேஸ்வரன், செயலாளர் செபஸ்தியான் ஆரோக்கிய நாயகம், பொருளாளர் திருமதி. சேவயர் கத்தரின், தேசிய அமைப்பாளர் தேவரெத்தினம் டேவிட் நிதர்ஷன், பிரதி செயலாளர் திருமதி. டொறின் பிரியதர்ஷினி அரவிந்தன், பிரதி பொருளாளர் கலாநிதி மக்ஸ்மின் பிரான்சிஸ், பிரதி தேசிய அமைப்பாளர் பரந்தாமன் அச்சுதராஜா ஆகியோர் நிறைவேற்றுகுழு உறுப்பனர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 10 பேரையம் கொண்ட ஆரம்ப நிறைவேற்றுக்குழுவானது அதன் முதலாவது கூட்டத்தில் விடயங்களுக்கான மதியுரைஞர்களையும் இணைப்பாளர்களையும் மாவட்ட அமைப்பாளர்களையும் தேர்ந்தெடுக்கும் அதன் பின்னர் அவர்களையும் சேர்த்தே இறுதியில் நிறைவேற்றுக்குழு அமையும் என கட்சி தலைவர் கலாநிதி காசிலிங்கம் விக்கினேஸ்வரன் தெரிவித்தர்.

# வடமாகாண பிராந்திய ஊடகவியாளர்களுக்கான தெளிவூட்டும் இரண்டுநாள் செயற்றிட்டம்



வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் எற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்படும் வடமாகாண பிராந்திய ஊடகவியாளர்களுக்கான தெளிவூட்டும் இரண்டுநாள் செயற்றிட்டம் 31-01-2024 தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பாலவாணன் சிவபாலசுந்தரன் கலந்து கொண்டு ஊடக சுதந்திர தொடர்பிலும், ஊடகவியாளர்களின் சமூக நோக்கம் தொடர்பிலான விளங்கங்களையும், அரசாங்கத்தின் வேலைத்திட்ட செய்தியினை பிரசுசித்தல் பற்றியும், அறநெறி சார்ந்த அறிக்கையிடல் குறித்தும் விளக்கமளித்தார்.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் எல். விஜய நாயக்க, சிறுவர் பிரிவின் சஞ்சீவவசத்துன குமாரி, ஊடக ஆய்வாளர் சதுரங்க கப்புக்கந்த, யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராம் மற்றும் 40 வடமாகாண ஊடகவியாளர்கள் கலந்துகொண்டனர்.



## இவ்வார ராசிபலன் (24 பக்கத் தொடர்ச்சி)



**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்னை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E



**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N



**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z



**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த வி‘யம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

New Funding to Support Housing for Asylum Claimants Arriving Canada

## கனடாவில் தஞ்சமடையும் புகலிடக் (அகதிக்) கோரிக்கையாளர்களுக்கான வீட்டுவசதிகளை ஏற்படுத்த மத்திய அரசின் புதிய நிதி ஒதுக்கீடு



உலகளாவிய நாடுகளிலிருந்து கனடாவை நோக்கிய இடம்பெயர்வு அதிகரித்து வருவதால், கனடாவில் புகலிடம் கோருபவர்களின் (அகதிக் கோரிக்கையாளர்களின்) எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவ்வாறான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான வீடுகள் மற்றும் வசிப்பதற்கு வேண்டிய உபு பொருட்கள் போன்றைவற்றை வழங்க கனடாவிதன் மாகாணங்கள் மற்றும் நகராட்சிகளின் பொறுப்பாக இருக்கும் அதே வேளையில், கனடாவில் புகலிடம் கோரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தின் அனைத்து அமைச்சுகளும் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை கனடிய மத்திய அரசு வலியுறுத்துகிறது.

31-01-2024 புதன்கிழமையன்று கனடாவின் மாண்புமிகு குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர், அவர்கள், 2023-2024 நிதியாண்டின் ஒரு பகுதியாக இடைக்கால வீட்டு உதவித் திட்டத்திற்கு (IHAP) கூடுதலாக $362.4 மில்லியன் நிதியுதவியை அறிவித்தார். IHAP மூலம், கனடா அரசாங்கம் மாகாண மற்றும் மாநகர அரசாங்கங்களுக்கு செலவு-பகிர்வு அடிப்படையில், புகலிடக் கோரிக்கையாளர்களின் அதிகரித்த அளவுகளின் விளைவாக ஏற்படும் அசாதாரணமான இடைக்கால வீட்டு அழுத்தங்களை நிவர்த்தி செய்ய நிதி வழங்குகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நிதியானது, தங்குமிடத்திற்கான தேவை அதிகரிப்பதை எதிர்நோக்கும் மாகாணங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு ஆதரவளிக்கும் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் வீடற்ற நிலையை எதிர்கொள்ளுவதை தடுக்க உதவும் என கனடாவின் மத்திய அரசு நம்புகின்றது.

இன்றைய நிதியானது கடந்த கோடையில் IHAP மூலம் கிடைத்த தேசிய நிதியில் $212 மில்லியனுக்கு கூடுதலாக உள்ளது.

கனடாவில் புகலிடம் தேடி இங்கு வந்துள்ள மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறப்பாகப் பணியாற்றுவதற்காக மாகாணங்கள் மற்றும் நகராட்சிகளுடன் இணைந்து கனடாவின் மத்திய அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றும், அதே நேரத்தில் நமது சமூகங்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் உள்கட்டமைப்பு அழுத்தங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும். நீண்ட கால தீர்வுகளைக் காண, அரசாங்கத்தின் அனைத்து உத்தரவுகளையும் மீறி, நாங்கள் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என கனடாவின் மாண்புமிகு குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

---

## நாவற்குழியில் பசுமை இயக்கத்தின் நிகழ்ச்சியில் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் அனுசரணையுடன் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன




தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் கடந்த சனிக்கிழமை (27.01.2024) இடம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ந. கேதீஸ்வரசிவம், செ.கிருஸ்ணகோபால், கு.கல்யாணசுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டி, அவர்களிடையே சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக, அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடராகவே நாவற்குழியில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது.









இந்நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL | COMMERCIAL | INDUSTRIAL | VACANT LAND | CONSTRUCTION

## Building a Strong Foundations through Our Mortgage financial Solutions.




| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity Line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

Mortgage Alliance — RightBroker = RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank | TD Canada Trust | National Bank | First National Financial LP | MCAP | Home Trust | Equitable Bank | RFA | radius financial | RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
-Loans
-Cash
-Debt Consolidation
-1st & 2nd Mortgage
-Home Renovation Loan
-Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1452 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 2, 2024

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"

கனடா- ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய "தமிழர் மர-புரிமை மாதக் கொண்டாட்டம்" கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.00 மணி தொடக்கம் கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானம் மற்றும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் நிறுவனரும் பிரதம சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் வழி நடத்தலில் சக சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் கல்லூரியின் நிர்வாகிகள் மற்றும் அதிபர் ஆசிரியைகள் ஆகியோர் இணைந்து விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)





# ஸ்ரோவில் நகர பல்கலாச்சார கழகம் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்"

கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் ஸ்ரோவில் நகரத்தில் வாழும் தமிழ் மக்கள் இணைந்து நிறுவிய "ஸ்ரோவில் நகர பல்கலாச்சார கழகம்" நடத்திய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்" கடந்த வெள்ளிக்கிழமையன்று 26-01-2024 மாலை அங்குள்ள உயர் கல்லூரி மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

கழகத்தின் தலைவர் சிவன் இளங்கோ மற்றும் செயலாளர் சுந்தரலிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் இணைந்து ஏற்பாடு செய்த இந்த அற்புதமான விழாவில் முத்தமிழின் மூன்று பிரிவுகளாக விளங்கும் "இயல். இசை. நாடகம்" ஆகியவை நிகழ்ச்சிகள் நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)

# அண்மையில் கனடாவில் மறைந்த "அருட்கவி" ஞானகணேசன் அவர்களிற்கான அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்த கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம்





அண்மையில் கனடாவில் காலமான முன்னாள் கனடா கவிஞர்கள் கழகத்தின் தலைவரும் கனடா எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் பொருளாளருமான"அருட்கவி" ஞானகணேசன் அவர்களிற்கான அஞ்சலிக் கூட்டத்தை 28-01-2024 கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

கனடா கவிஞர் கழகத்தின் தற்போதைய தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை-யில் நடைபெற்ற இந்த விழாவில் கனடா கவிஞர்கள் கழகத்தின் அங்கத்தவர்கள் பலரும் கனடா எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் பலரும் தத்தம் குடும்பத்தோடு கலந்து கொண்டு மறைந்த "அருட்கவி" அவர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர (உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

# New funding to support housing for asylum claimants arriving Canada

## கனடாவில் தஞ்சமடையும் புகலிடக் (அகதிக்) கோரிக்கையாளர்களுக்கான வீட்டுவசதிகளை ஏற்படுத்த மத்திய அரசின் புதிய நிதி ஒதுக்கீடு



உலகளாவிய நாடுகளிலிருந்து கனடாவை நோக்கிய இடம்பெயர்வு அதிகரித்து வருவதால், கனடாவில் புகலிடம் கோருபவர்களின் (அகதிக் கோரிக்கையாளர்களின்) எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இவ்வாறான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான வீடுகள் மற்றும் வசிப்பதற்கு வேண்டிய உபு பொருட்கள் போன்றைவற்றை வழங்க கன-டாவிதன் மாகாணங்கள் மற்றும் நகராட்சிகளின் பொறுப்பாக இருக்கும் அதே வேளையில், கனடாவில் புகலிடம் கோரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தின் அனைத்து அமைச்சுகளும் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை கனடிய மத்திய அரசு வலியுறுத்துகிறது.

(உள்ளே செய்தி 26ம் பக்கத்தில்)

# வடக்கு இலங்கையில் இந்தியாவின் நடவடிக்கைகளை உளவு பார்க்கும் சீனாவிற்கு உதவியாக பாகிஸ்தானியர்களும் களம் இறக்கப்பட்டுள்ளனர் என்பது நிரூபணமாகின்றது




கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையில் தமிழகத்தின் சென்னை மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் இந்தியப் பிரதமர் மோடி பயணித்த சமயம் இலங்கையின் வடக்கே மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் அதிகளவு பாகிஸ்தானியர்கள் நடமாடியுள்ளனர்.

இந்தளவு பாகிஸ்தானியர்கள் வடக்கில் இதுவரை நடமா-டியமை கிடையாது என வடக்கு வாழ் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

(உள்ளே செய்தி 20ம் பக்கத்தில்)

HIGH SKY CANADA
• Visitor visas, Study visas, and Work Visas Applications
• Convert to WORK PERMIT from other status (Visitor)
• PR and Citizenship Application
• IELTS/ CELPIP/ CAEL Preparation
• Traffic Tickets and Pardon
• Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL
CONTACT NOW!
Phone number/WhatsApp:
+1 (437) 365-5668
Email: highskycanada@gmail.com

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker